Registered as a Newspaper

NEW SCIENCE ACADEMY
IN FRONT OF B. M. C.
JAFFNA
DAY CLASS
பிரிவு I
பிரிவு II
நடைபெறுகின்றது.

# உதயன்

விலை
ரூபா 3/50

NEW SCIENCE ACADEMY
KANNATHIDDY ROAD,
JAFFNA.
90 / /L
WE KEND
PAPER CLASSES
நடைபெறுகின்றது.

சுடர்: 5 சுக்கில ஆ மாசி மீ 15 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 01 (27-02-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 20

### ஈழத்தமிழர் பிரச்சினை:

# கலைஞரின் முயற்சி தடங்கல் நிலையில்!

## ஈ. பி. ஆர். எல். எவ். தூதுக்குழுவை சந்தித்த பின் அவரே தகவல்

சென்னை, பெப்ரவரி: 27

ஈழத்தமிழர் குழுக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி ஈழத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஒன்றைக் காணுவதற்கு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி எடுத்த முயற்சியில் தற்போது தடங்கல் நிலை ஏற்பட்டிருக்கிறது.

நேற்று சென்னையில் ஈ. பி. ஆர். எல். எவ். தூதுக்குழு ஒன்றை சந்தித்த பின்னர் தடங்கல் நிலை ஏற்பட்டிருப்பது குறித்து அவரே தகவல் வெளியிட்டார்

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கைத்தொழில் அமைச்சர் ஜனாப் அபுயூசுப், சபைத் தலைவர் பொன் ராஜகாரியர், மற்ற உறுப்பினர்களான வி. ஏ, கந்தசாமி, திரு. சாந்தன், திருமதி ஸ்ரீதரன் ஆகியோர் முதலமைச்சர் கருணாநிதியை நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

பின்னர் செய்தியாளர்களை திரு. கருணாநிதி சந்தித்தார். அவர் அச்சமயம் சொன்னதாவது;

(5ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



வாத்திமாரே உப்பிடிச் சண்டை பிடிச்சால் பிள்ளையளை எப்படி வழி நடத்திறது . . . ?

## நிக்கரகுவாவில் பெண்மணியின் கையில் ஆட்சி!

மணகுவா, பெப் 27

நேற்று நடந்த தேர்தலில் நிக்கரகுவா ஜனாதிபதி டானியல் ஒற்றேகா தோற்றுவிட்டார். அமெரிக்க ஆதரவுடன் போட்டியிட்ட எதிர்க் கட்சிகளின் வேட்பாளர் திருமதி வயலெற்றா சாமொறா வெற்றி பெற்றார்.

அளிக்கப்பட்ட வாக்குகளில் 71 சதவீதமானவை எண்ணப்பட்ட நிலையில் திரு. ஒற்றேகா தமது தோல்வியை ஒப்புக் கொண்டார். (உ-எ)

### வாகரைப் பொதுச்சபைக் கூட்டத்தில் நேற்று

# புலிகள் கட்சியின் யாப்பு அங்கீகரிப்பு

கொழும்பு, பெப்ரவரி. 27

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாப்பு கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தில் நேற்று அங்கீகரிக்கப்பட்டது.

மட்டக்களப்பு வாகரையில் கோராமருவு என்ற இடத்தில் நடைபெற்ற கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்திலேயே யாப்பு உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முதலாவது பொதுச்சபைக் கூட்டம் நேற்று முன்தினம் முதல் வாகரையில் தொடர்ந்து நடைபெற்று வந்தது தெரிந்ததே.

பொதுச்சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட நகல் யாப்பு நேற்றைய கூட்டத்தில் சில திருத்தங்களுடன் அங்கீகரிக்கப்பட்டது.

நேற்றைய கூட்ட நிகழ்ச்சிகளுக்கு கட்சியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா தலைமை வகித்தார்.

(5ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழ் போராளிகள் வேதாரண்யத்துக்கு மாற்றம்

சென்னை, பெப். 27

இராமநாதபுரம், மண்டபம் அகதி முகாமில் இருக்கும் இலங்கைத் தமிழ்ப் போராளிகள் வேதாரணயத்துக்கு அனுப்பப்பட்டு வருவதாக சென்னைச் செய்தி ஒன்று தெரிவித்தது,

தஞ்சாவூர் மாவட்டத்தில் வேதாரண்யம் உள்ளது.

கடந்த சனிக்கிழமை 144 அகதிகள் வேதாரண்யம் அனுப்பப்பட்டனர். அவர்களில் 41 பேர் தமிழ்ப் போராளிகள் ஆவர்.

கடந்த ஞாயிறு வேதாரண்யம் அனுப்பப்படவிருந்த 60 அகதிகளில் 15 பேர் போராளிகள் ஆவர். (ஒ-9)

## எதிர்க்கட்சிகள் மாநாட்டில் மூன்று விடயங்கள் ஆராய்வு

கொழும்பு, பெப், 27

கொழும்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் மாநாட்டில் மூன்று விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

மனித உரிமை மீறல், வாழ்க்கைச் செலவு மற்றும் விலை உயர்வு, ஜனநாயக பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் ஆகியவையே அந்த மூன்று விடயங்களும் ஆகும்.

இம்மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உட்பட பதினொரு கட்சிகள் பங்குபற்றின.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, ஈரோஸ், முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை,

(5ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை - இந்திய நட்புறவு ஒப்பந்தம் புத்தாண்டுக்கு முன்னர் கைச்சாத்தாகும்!

கொழும்பு, பெப் 27

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் இந்திய-இலங்கை நட்புறவு உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்று கொழும்பு அரசு வட்டாரங்களில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

உத்தேச நட்புறவு உடன்படிக்கையில் கருத்து வேறுபாட்டுக்குரிய அம்சங்கள் நீக்கப்பட்டு விட்டன என்று தகவலறிந்த அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

நகல் உடன்படிக்கையை இலங்கை அதிகாரிகள் தற்போது பரிசீலனை செய்து வருகின்றனர். அதன் பின்னர் நகல் உடன் படிக்கை எதிர்வரும்மார்ச்முற்பகுதியில் புதுடில்லிக்கு அனுப்பப்பட்டு விடும் என்று அரசு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

நட்புறவு உடன்படிக்கை கைச்சாத்திடும் வைபவம் கொழும்பிலா அல்லது புது

(5ஆம் பக்கம் பார்க்க)



சென்னை மீனம்பாக்கம் ரயில் நிலையத்துக்கு அருகில் கடந்த சனிக்கிழமை அதிகாலை 4-30 மணிக்கு இடம் பெற்ற கார் - லொறி விபத்து ஒன்றில் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா படுகாயம் அடைந்தார் என்பது தெரிந்ததே. சென்னை தேவகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கும் அவரை முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த ஞாயிறு சென்று பார்வையிட்டார். அப்போது எடுக்கப்பட்ட படத்தை மேலே காணலாம். அருகில் வாழப்பாடி ராமமூர்த்தி.
(விபத்தில் சேதமுற்ற காரின் படம் 6ஆம் பக்கத்தில்)

## இலங்கையை விட்டு முதல்வர் வரதர் செல்வார்?

அமைதிப்படை முற்றாக விலகிய பின்னர் வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாக அதிகாரிகளும் முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாளும் இலங்கையை விட்டுப் புறப் படுவர் என்று நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தெரியவருவதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மத்திய அரசுப் பிரதிநிதி ஒருவரிடம், தானும் இலங்கையை விட்டுப் புறப்படுவதாக திரு. வரதராஜப்பெருமாள் சொன்னார் என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஒ-எ)

### அமெ.டொலர்களைகடத்த முயன்று

## கைதான மாதகல் வாசிக்கு $1\frac{1}{2}$கோடி ரூபா அபராதம்!

யாழ்ப்பாணம், பெப். 27

இந்தியாவில் இருந்து இலங்கைக்குள் அமெரிக்க டொலர்களைக் கடத்திய சூத்திரதாரிக்கு ஒருகோடி 40 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த மூன்றாம் திகதி இந்தியாவில் இருந்து ஒருலட்சத்து 11 ஆயிரத்து 750 அமெரிக்க டொலர்களை இலங்கைக்குள் கடத்த முயன்ற மாதகலைச் சேர்ந்த நால்வர் வள்ளத்துடன் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது அறிந்ததே.

இந்த நான்கு பேரும் கடற்படையினரால் கொழும்பு கோட்டை சுங்கப் பகுதியினரிடம்ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த கடத்தல் குறித்து கடந்த 16 ஆம் திகதி சுங்க உதவி இயக்குனர் திரு. டபிள்யூ. எம். ஜெயத்திலக பண்டாரா விசாரணையை நடத்தினார். விசாரணையின் பின்னர் கடத்தலுக்கு சூத்திரதாரியான குணரத்தினம் என்பவருக்கு 1 கோடி 40 லட்

[5 ஆம் பக்கம் பார்க்க]

### சுபநேரம்

27 — 02 — 1990

செவ்வாய்கிழமை மாசி 15

சுபநேரம்:
10 . 59 முதல் 12 . 29 வரை

ராகுகாலம்:
3 . 29 முதல் 4 . 59 வரை

கரிநாள்

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்.

## மட்டு. ஆசிரிய கலாசாலை மாணவர்கள் பகிஷ்கரிப்பு

மட்டக்களப்பு, பெப். 27

மட்டக்களப்பு ஆசிரியபயிற்சிக்கலாசாலையில் சிவராத்திரி கலைநிகழ்சியின் போது கலாசாலை மாணவர்களுக்கிடையே இடம்பெற்றதாகக் கூறப்படும் மோதல் சம்பவம் ஒன்றை அடுத்து, கலாசாலையின் முதலாம் வருட மாணவர்கள் நேற்று முதல் வகுப்புகளுக்குச் செல்லாமல் வகுப்புகளை பகிஷ்கரித்து வருகின்றனர்.

தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டோர் பகிரங்க மன்னிப்புக் கோரவேண்டும் என்றும்—

அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் பகிஷ்கரிப்பில் ஈடுபடும் மாணவர்கள் வற்புறுத்தி வருகின்றனர். (உ-21)

### இந்தியப் படையின் தாக்குதலுக்கு இலக்கான

## யாழ். நகரப் பகுதிகளை நேற்று நெடுமாறன் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், பெப். 27

தமிழ்நாட்டுப் பிரமுகரும், காந்தி காமராஜர் காங்கிரஸ் தலைவருமான திரு. பி நெடுமாறன் நேற்று யாழ் நகரப் பகுதியையும் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டார்.

இந்தியப் படையினரின் தாக்குதலுக்கு இலக்கான பல இடங்களை அவர் பார்வையிட்டதுடன், பாதிப்புக்குள்ளானவர்களிடம் பல்வேறு விடயங்களை மிக நுணுக்கமாக கேட்டு அறிந்துகொண்டார்.

தமக்கு நேர்ந்த இன்னல்கள் குறித்து விவரித்தவர்களுக்கு அவர் ஆறுதலும் கூறினார், (ஒ)

# ஈ. பி. ஆர். எல். எவ். யோசனைகள்!

கொழும்பு, பெப் 27

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியை நேற்று ஈ. பி. ஆர். எல். எவ் பிரதிநிதிகள் சந்தித்த போது கலைஞரிடம் அக் கட்சியின் பிரதிநிதிகள் தங்களது கட்சியின் தீர்மானம் ஒன்றை கையளித்தனர் அல்லவா?

அதன் சாரம் கடந்த ஞாயிறு உதயனில் பிரசுரமாகியிருந்தது. பத்துப் பக்கங்களில் அடங்கியிருந்த இந்த யோசனையின் சுருக்கம் என்ன என்பதை கொழும்பில் ஈ. பி. ஆர். எல். எவ் வட்டாரங்கள் நேற்று வெளியிட்டன. அதன் விபரம் வருமாறு:-

**கருத்தொருமித்த! அரசியல் திட்டம்**

1.) ''மாகாண அரசுக்கு இருக்க வேண்டிய அதிகாரங்கள், ஏற்பாடுகள் தொடர்பாகவும், தமிழ் பேசும் மக்களின் நிரந்தரப் பாதுகாப்புக்காகவும் மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் தொடர்பாகவும், தமிழர் கட்சிகள் அனைத்திலும் கருத்தொருமித்த, தெளிவான, முழுமையான அரசியல் நிலைப்பாட்டுத் திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும்.

தமிழக முதல்வர் உருவாக்கியுள்ள இப் பேச்சுவார்த்தை அரங்கிலேயே அத்திட்ட வரைவு மேற்கொள்ளப்பட்டு பொது உடன்பாடு காணப்படுதல் வேண்டும்.

2) அத்திட்டத்திற்கு தமிழக அரசின் சார்பில் அதன் முதல்வரும் இந்திய அரசின் சார்பில் இந்தியப்பிரதமரும் தமது அங்கீகாரத்தை வழங்குதல் வேண்டும்.

3) இத்திட்டம் எந்தக் காலக்கெடுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது குறித்து இந்திய அரசு, ஸ்ரீலங்கா அரசுக்கு ஒரு காலக்கெடுவாக விதித்தல் வேண்

(5ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Honda Reconditioned C 90, MD 90 CD 90 C50 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. Anton Enterprises 390, மெயின் வீதி பஸ்ரியன் சந்தி, சுண்டிக்குளி யாழ்ப்பாணம். (11914)

### கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

(Unsex) தனி சிகப்பு கறுப்பு நிற சேவல் பேடு (பிலிமத்), கறுப்பு வரிசேவல், (Dekalb) பிறவுண் பேடு, சேவல் (Cobb) புறொயிலர் குஞ்சுகள் (28-2-90) புதன் கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா ஒழுங்கை, சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகில். (11850)

### கோழிக்குஞ்சு விநியோகம்

3மாதம் நிறைவு செய்த Golden Comet பிறவுண் பேட்டுக் கோழிகள் விற்பனைக்குண்டு. சற்குணராஜா& பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (2657)

Hyline வெள்ளை' சிவப்பு, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள், Golden Comet பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் Hisex பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும். சற்குணராஜா& பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில் (2656)

### தேவை

மனேஜர், சப்ளையர்கள் கோக்கி, கையாள், அரைப்பவர் உடன் எமது சைவ ஹோட்டலுக்குத் தேவை. தங்குமிட வசதியுண்டு. ஹோட்டல் வேலை அனுபவமுடையவர்கள்உடன் நேரில் வரவும். வெ. பக்கிர்சாமி ராஜமணி ஹோட்டல் 375, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (2214)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் எவ்வகையான பிரச்சினைகளையும் உன்னதமான மட்டக்களப்பு ஆருட மாந்திரீகமுறைப்படி அரச அங்கீகாரம் பெற்றுள்ள பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரால் வெற்றிகரமாய் தீர்வு காணப்படும். தொடர்பு கொள்ளுங்கள்: "சக்தி சரவணா 210, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். (யாழ் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக) வியாழன் விடுமுறை. (2641)

### போட்டோஸ்ரட்

யாழ் பஸ்நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் மிகவும் தெளிவாக போட்டோ ஸ்ரற்செய்து கொள்ளவும், ஆங்கில ரைப்பிங், மொழி பெயர்ப்புகளுக்கும் ஸ்ரீ காந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி. பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (C/3717)

### புத்தகம்

சித்திரக் கதைகள் (காமிக்ஸ்), முத்து, லயன், திகில், வெளியீடுகளும் மீண்டும் இந்திய சகல சஞ்சிகைகளும் வந்து விற்பனையாகிறது. பொக்கட் கலண்டர்களும், கண்ணதாசன் எழுதிய நூல்களும், எண்சோதிட புத்தகங்களும் ஏராளமாக வந்துள்ளன. பிரதிகளுக்கு முந்துங்கள். ராஜன் புத்தகசாலை, 12, பஸ்நிலையம் யாழ்ப்பாணம். (2596)

### TYPEWRITERS

Typewriters வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள் Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/3828)

### சமூகக்கல்வி

சமூகக்கல்வி குறிப்புகள் ஆண்டு 10,11 விற்பனையாகின்றன துரிதமீட்டலுக்கு, பரீட்சைக்கு ஏற்றவை எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஏராளமான குறிப்புகளை விரைவில் பெறலாம் ஆக்கம் நா. மயில்வாகனம் பரியோவான் கல்லூரி யாழ்ப்பாணம் பிரதிகளுக்கு முன் கூட்டி அறிவிக்கவும். (11874)

## வரட்சி நிவாரண முத்திரை மோசடியாம்

முல்லைத்தீவு பெப்.27

முல்லைத்தீவுப் பகுதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வரட்சி நிவாரண முத்திரைகள் மோசடி செய்யப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

சங்கத்தின் கணக்காளர் ஒருவர் தற்காலிகமாகவேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இது சம்பந்தமான விசாரணைகள் மேற்கொண்டுவருவதாகச் சங்கத்தின் தலைவர் கூறினார். (இ-92)

## பணம் கிடைக்கப் பெற்றது

பளைக்கும் இயக்கச்சிக்கும் இடையில் என்னால் தவறவிடப்பட்ட மணி பேசும் பணமும் வாணிகல்வி நிலையத்திடமிருந்து பெற்றுக் கொண்டேன் இவ் விஷயத்தில் அக்கறை எடுத்த சுன்னாகம் வாணி இன்ஸ்ரிரியூட் ஸ்தாபனத்தாருக்கு எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

P. மாசிலாமணி

[2655]

பிரயாணம் பிரயாணம் பிரயாணம்

## 'M' THREE TRAVEL

வழங்கும் உடனடிப் பிரயாணம்

★ சவூதி அரேபியா (Saudi Arabiy)

★ குவைற் (Kuwait) (ஆண்கள், பெண்கள்)

சவூதி அரேபியா (ஆண்கள் மட்டும்)

| | | வெற்றிடம் | சம்பளம் |
|---|---|---|---|
| 1. | Plumber | 5 | 650 SR |
| 2. | Suvage Treatment Technician (கழிவு நீர் சுத்திகரிக்கும் உத்தியோகத்தர்) | 3 | 750 SR |
| 3. | Pest Control Technician | 4 | 750 SR |
| 4 | Carpenters | 2 | 600 SR |
| 5. | Acc unts Cleark | 2 | 700 SR |
| 6. | Dispatches | 5 | 650 SR |
| 7. | Radio-T. V. Technician | 5 | 700 SR |
| 8. | First Aid man | 1 | 800 SR |
| 9. | House Driver | 6 | 600 SR |
| 10. | Driver's | | 1000 SR |

2. Kuwait (குவைற்)

School Cleaners (ஆண், பெண் இருபாலாருக்கும்)

(விரைவில் பயணம்)

★ நம்பிக்கை ★ நாணயம்

என்பனவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய தாபனம்

## 'M' THREE TRAVEL

தலைமை அலுவலகம்:

"இந்திர பவனம்"
சோதி வீதி.
காங்கேசன்துறை.

கிளை அலுவலகம்:

இல 1, 2வது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-3918]

## நன்றி நவிலல்



அமரர்

### வல்லிபுரம் மயில்வாகனம்

(பிரபல சட்டத்தரணி)

அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி, மக்கள்,
குடும்பத்தினர்.

அராலி வடக்கு,
அராலி.

(சி/[illegible])

ஷப்றா- சென்றலைட்ஸ்

## இிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வி இல்லை

யாழ்ப்பாணம் பெப் 27

கடந்த 25 ஆம் திகதி நடைபெற்ற ஷப்றா சென்றலைட்ஸ் அணிக்கிடையிலான சினேகபூர்வ கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில்துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 155 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தது. சதீஸ்காந்தன் 26, மதி 23, கலாவண்ணன் 21, புரட்சிதாசன் 19, மனோகரன் 17, பாலகுமார் 13, உமாசங்கர் 11, சாயிஸ்கந்தன் 11 ஓட்டங்களை பெற்றனர். ஷப்றா அணி சார்பில் பந்து வீசிய இளங்கோ 5 விக்கட்டுகளையும், ஜெயந்தன், தயாளன் ஆகியோர் தலா 2 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

அடுத்து ஆடிய ஷப்றா அணி 186 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தபோது இரு அணித்தலைவர்களும் போட்டியை நிறுத்துவதாக முடிவு செய்தனர்.

ஷப்றா அணியின் சார்பில் ஜெயந்தன் 41, விஜயகுமார் 35, வித்தியாதரன் 20, நரேந்திரன் ஆட்டமிழக்காமல் 17 ஜெயப்பிரகாஸ் 15, குலசிங்கம், நித்தியராஜன் இருவரும் தலா 13 ஓட்டங்களைப் பெற்றனர். சென்றலைட்ஸ் அணி சார்பில் பந்து வீசிய பாலதமார் சளைக்காமல் தொடர்ந்து முப்பது ஓவர்கள் பந்து வீசி எட்டு விக்கட்டுக்களை கைப்பற்றினார். (இ)

## வெற்றுச் சாக்கு விற்பனை

வலி கிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் — அச்சுவேலி

எமது சங்கத்தில் 5000 வெற்றுச் சாக்குகள் கேள்வி விண்ணப்ப மூலம் விற்பனைக்கு இருக்கிறது. விண்ணப்பிக்க விரும்புவோர், ரூபா 5/- கட்டி விண்ணப்பப்பத்திரத்தை பெற்று மீளத்தக்க வைப்புப் பணமாக ரூபா 250/- கட்டி விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் 05-03-90ஆந் திகதிக்கு பிந்தாமல் 'தலைவர், வலி கிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், இராச வீதி, அச்சுவேலி' என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்வலப்பின் இடது பக்க மேல் மூலையில் 'வெற்றுச்சாக்கு கேள்வி விலை' என குறிப்பிடல் வேண்டும்.

பொது முகாமையாளர்

[சி-3920]

## பிறந்த தினமின்று நிறைந்து விட்டாய் எம் நெஞ்சில்



செல்வன்

### சண்முகம் உதயவர்மன் (பேபி)

(புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவன்)

மலர்வு: 27 - 02 - 1972 உதிர்வு: 19 - 06 - 1989

தொண்ணூறில் சோதனை என்றாய்!
சோதனைதான் எடுக்க முன்பு
வேதனையில் துடிக்கவிட்ட
சோதனைதான் வந்ததுவோ!
அன்பான மகனே! ஆசையுள்ள தம்பியே!!
அந்நியரின் வேட்டுக்கு அநியாயமாய்போயினையோ?
பதினேழு வயதினிலே உன்னைப் பறிகொடுத்த
பரிதாபம் சதியென்று புரிந்தாலும் விதியென்று
விழுங்குகிறோம்!

கண்ணீரைக் கடலாக்கி
காலமெல்லாம் கதறவைத்த
கல்லான கடவுளிடம், கதறித்தான் வேண்டுகிறோம்

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்:

அப்பா, அம்மா, அண்ணாமார்கள்.

73, பலாலி வீதி,

(11870)

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

முதலாவது

## ★ பிறந்தநாள் வாழ்த்து ★

27 — 02 — 1990



### செல்வி தர்ஷிகா

கோவிந்தராஜா - பேரின்பராணி தம்பதியின் செல்வமகள் தர்ஷிகாவின் முதலாவது பிறந்தநாளை விநாயகப் பெருமான் திருவருளால் இன்று அவரது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை

"இறைவழி நின்று
துறைபல கற்று
நிறைமதியென நீ வாழ
மனநிறைவோடு"

எனவாழ்த்தும்:- அப்பா - அம்மா, பெரியப்பா குடும்பத்தினர், (உரும்பிராய்) குட்டிச்சித்தப்பா, (கொலன்ட்) சங்குவேலி அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், சித்திமார், ஆனந்தராசா குடும்பத்தினர் (நல்லூர்) கதிரவேலு குடும்பத்தினர், (காரைக் காட்டுலேன்) கனடா அப்பம்மா குடும்பத்தினர் மற்றும் ஆசை அண்ணாமார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

இல. 64, காரைக்காட்டுலேன்,
வண்வடமேற்கு,
யாழ்ப்பாணம்.

[11913]

## பதவி வெற்றிடம்

புங்குடுதீவு-நயினாதீவு பல.நோ.கூ. சங்கம் (வ.து)

### பொது முகாமையாளர் தரம் III

1. கல்வித் தகைமைகள்:

அ. கூட்டுறவு வேலையாளரின் 8 ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமைத்துவ/மேற்பார்வையாளர் பதவியில் 3 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு வேலையாளர் 9 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் 6 வருடத்துக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரி அல்லது சம மதிப்புள்ள தராதரமும், ஒரு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனத்தில் முகாமைத்துவமட்ட பதவியில் 2 வருடத்துக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவு பணியாளர் பயிற்சிநெறி (உயர்தரம்) தராதரப் பத்திரம் / க. பொ. த. (உயர்தரம்) தராதரப் பத்திரத்தில் 3 பாடங்களில் சித்தியும், ஒரு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனத்தில் முகாமைத்துவமட்ட பதவியில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

2. சம்பளத் திட்டம் - 1105 - 2170 - 60x4–75x11 இதரபடிகளும்
3. வயதெல்லை - 23 — 50
4. பிணை ரொக்கம் - 3000/- ஆதனம் 5000/-ம்
5. விண்ணப்ப முடிவுத் திகதி: 23 - 03 - 1990

விண்ணப்பங்கள்; தலைவர், புங்குடுதீவு-நயினாதீவு, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புங்குடுதீவு என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்,
புங்குடுதீவு - நயினாதீவு,
ப. நோ. கூ. சங்கம்,
புங்குடுதீவு.

(சி-3921)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது
உண்ணலி னூங்கினியது இல்.

**பொருள்:**

தெளிந்த நீர்போல் சமைத்த கூழே ஆனாலும், முயற்சியால் கிடைத்ததை உண்பதைவிட இனிமையானது வேறொன்று இல்லை.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 2288
யாழ்ப்பாணம்.
27- 02- 1990 த. பெ.இலக்கம் : 23


# ஏனோ தானோ நிலை ஏன்?

கொழும்புக்கு அடுத்ததாக இரண்டாவது பெரிய நகரம் யாழ்ப்பாணம் ஆகும்.

ஏனைய தமிழ் பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் மக்கள் இங்கு செறிந்து வாழ்கிறார்கள்.

சந்தைகள், அரச அலுவலகங்கள், பெரிய பாடசாலைகள் ஆஸ்பத்திரிகள், பஸ் நிலையம் இருப்பதால் தினமும் ஆயிரக்கணக்கானோர் வெளியூர்களில் இருந்து இங்கு வந்து போகிறார்கள்.

இப்படியான நகரத்தில் ஒரு பெரும் குறை இருந்து வருகிறது. அதுதான் பொது மலசல கூடம் இல்லாத குறை.

இன்று நேற்று அல்ல. நீண்ட காலமாக இக்குறை இருந்து வருகிறது. இதனை நிவர்த்தி செய்ய எவரும் முன் வருவார்கள் போல் தெரியவில்லை.

மலசல கூடங்கள் இல்லாதகுறையை பஸ்நிலையப் பகுதியில் உள்ள ஒழுங்கைகள் தற்போது நிரப்பி வருகின்றன.

பஸ்நிலையத்துக்கு வரும் மக்கள் அவசரத்துக்கு இந்த ஒழுங்கைகளையே பயன்படுத்துகிறார்கள். இதனால் துர்நாற்றம் வீசுகிறது. சுகாதாரத்துக்கும் பங்கம் ஏற்படுகிறது.

கொழும்பு மாநகரில் ஏற்கனவே பல பொது மலசல கூடங்கள் உள்ளன. சில இடங்களில் நவீன நில அறை மலசல கூடங்களும் கட்டப்பட்டுள்ளன.

அப்படி இருந்தும் இவற்றுக்கு மேலதிகமாக நடமாடும் மலசல கூடங்களையும் அமைக்க கொழும்பு மாநகரசபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

பொது மலசல கூடங்களில் உள்ள நெருக்கடியைத் தவிர்ப்பதே இந்த நடமாடும் மலசல கூடம் அமைக்கும் நோக்கம் ஆகும். கோட்டை, புறக்கோட்டை மற்றும் காலிமுகத் திடலில் காலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை இந்த நடமாடும் மலசல கூடங்களை வைப்பதற்கு கொழும்பு மாநகரசபை திட்டமிட்டு வருகிறது.

ஆனால் யாழ்ப்பாணத்தின் தற்போதைய அவல நிலையை காணும்போது சாதாரண ஒரு பொது மலசல கூடம் அமைக்கப்படுவதே பெரிய காரியமாகத் தோன்றுகிறது.

அதுவும் 1983க்குப் பின்னர் முதல் தடவையாக தற்போது யாழ் நகருக்கு உல்லாசப் பயணிகள் வந்துள்ளனர். பொது மலசல கூடம் இல்லாத ஒரு நகரத்தைக் காணும்போது அவர்கள் என்ன நினைப்பார்களோ தெரியாது.

ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் சுகாதார அபிவிருத்திக்காக பல நடவடிக்கைகள் எடுத்தபோதும் இந்த விடயத்தில் ஏனோ தானோ என்று இருப்பதன் மர்மம் என்ன?

இவ்வளவு காலமும் சகஜநிலை இல்லை என்று காரணம் காட்டியவர்கள் தொடர்ந்தும் தமது அசமந்தப் போக்கைக் கைவிட்டு உடனடியாக நடவடிக்கையில் இறங்க வேண்டும். பொதுமக்களின் சுகாதாரத்தைக் காக்க முன்வர வேண்டும்.

## யாழ். ரயில் நிலையத்தில் மின்சார வெளிச்சம் இல்லை

யாழ். ரயில் நிலையத்தில் அதிகாலை நேரம் பயணச் சீட்டுப் பெறவரும் பயணிகள் சவுண்டரின் மின்சார வெளிச்சம் இன்மையால் சிரமத்துக்குள்ளாகின்றார்கள்.

கடந்த கால வன் செயல்களின் போது மின் இணைப்புக்கள் அப்பகுதியில் சேதமடைந்தன. அவை இன்னும் திருத்தப்படாததுகுறிப்பிடத்தக்கது. (இ-3)

## கடத்தல் முயற்சி முறியடிப்பு ரூ. 7 இலட்சம் அபராதம்

கொழும்பு பெப். 27 இலங்கையில் இருந்து 40 இலட்சம் ரூபா பெறுமதியான கரன்சியை வெளிநாட்டுக்குக் கடத்த முயன்ற வெளிநாட்டவர் ஒருவருக்கு ஏழு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடத்தல் முயற்சியில் ஈடுபட்டவருக்கு சுங்கப் பகுதி உதவிப்பணிப்பாளர் திரு. என். ஜே. ஜெயராஜ் 10 லட்சம் ரூபா அபராதம் விதித்தார். அந்த பிரயாணியின் வேண்டுதலை அடுத்து அபராதத் தொகை ஏழு லட்சம் ரூபாவாக குறைக்கப்பட்டது.

சுங்கப்பகுதி உதவி அத்தியட்சகர் திரு. ஜே. டி. ஜே. எட்மண்ட இக் கடத்தலை முறியடித்தார். (க - 3)

## குடும்ப நலத் திட்டம் விஸ்தரிப்பு

## 10 கிராமங்கள் தெரிவு

யாழ்ப்பாணம் பெப் 27 யாழ்மாவட்டத்தில் குடும்ப நலத்திட்டங்களை விஸ்தரிக்க 10 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களால் போசாக்கற்ற தாய்மார்களும் குழந்தைகளும் கொண்ட சமுதாயம் உருவாவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குடும்ப சுகாதாரம், தாய். சேய் நலன் பேணல் போன்ற துறைகளில் ஆலோசனை வழங்க 10 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், மானிப்பாய் சாவகச்சேரி, தீவுப்பகுதி ஆகிய இடங்களிலேயே இக் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த கிராமங்களில் தொண்டர்களும் நியமிக்கப்பட இருக்கின்றனர். (இ-3)

## பாராட்டு வைபவம்

கிளிநொச்சி, பெப் 27 அகில இலங்கை ரீதியில் மூன்றாவது இடத்தை நீச்சல் போட்டியில் பெற்ற திரு.அ எமிலியானுஸ் பிள்ளையைக் கௌரவிக்கும் முகமாக அண்மையில் உருத்திரபுரம் விளையாட்டு கழகத்தில் பாராட்டு வைபவம் ஒன்று நடைபெற்றது.

வைபவம் உருத்திரபுரம் விளையாட்டு கழக உபதலைவர் அ. அன்ரன் அன்பழகன் தலைமையில் உருத்திரபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பதில் விளையாட்டு அதிகாரி திரு. ச. கனகராசா அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றியதுடன் திரு. அ. எமிலியானுஸ் பிள்ளைகக்கு பரிசுக் கேடயம் ஒன்றையும் வழங்கினார். செயலாளர். யே.நேசயேசுதாசன் (கெனடி நன்றி உரை நிகழ்த்தினார்) (க-76)

## மகஜர்

அம்பாறை பெப். 27 ''நாட்டின் பெரும்பாலான பாடசாலைகள் நிரந்தர அதிபர்களின்றி பதில் அதிபர்களின் பொறுப்பிலேயே இயங்குவதால், பல வருடங்களாக பதில் அதிபர் பணிகளைப் புரியும் சகலரையும் தாமதமின்றி நிரந்தர அதிபர்களாக நியமனம் செய்ய வேண்டும்'.'

இவ்வாறு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்க கல்முனை மாவட்டக் கிளை கோரிக்கைவிடுத்துள்ளது.

கிளைச்செயலாளர் ஜனாப் ஏ. எவ். எம். அமீன் இது தொடர்பான மகஜர்களை கல்வி அமைச்சர், மாகாண சபைகளுக்குப் பொறுப்பான கல்வி அமைச்சர்களுக்கும் கல்விச்சேவை ஆணைக்குழுவிற்கும் அனுப்பிவைத்துள்ளார்.

## குருநகர் சென் யேம்ஸுக்கு 2மாடிக் கட்டடம் - மதில்சுவர்

குருநகர், பெப். 27 பிரதேச உள்ளூராட்சித் திணைக்களம் குருநகர் சென்: யேம்ஸ் மகாவித்தியாலயத்திற்கு இரண்டு மாடிக் கட்டடமும், மதில் சுவர்களும் அமைத்துக் கொடுக்கும்.

குருநகர் விளையாட்டு அரங்கில நடைபெற்ற சென்: யேம்ஸ் மகாவித்தியாலய மெய்வல்லுனர் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. திவகலாலா மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. அ. ஸ்ரனிஸ்லோஸ் தலைமையில் வைபெவம் நடைபெற்றது.

உதவி ஆணையாளர் தொடர்ந்து பேசுகையில்: ''இத்தகைய விளையாட்டு மைதானத்திதான் மனிதப் பண்புகள் புடமிடப்படுகின்றன. பிரதேசத்தின் வளர்ச்சியில் பாடசாலை மெய்வல்லுனர்போட்களின் பங்களிப்பு இன்றிஅமையாதது என்றார்.''

இல்லங்களுக்கு இடையேயானபோட்டிகளில் போல்இல்லம் 170 புள்ளிகளைப் பெற்று முதலாவதாகவும், யோன் இல்லம் 133 புள்ளிகளைப் பெற்று இரண்டாவதாகவும், பீற்றர் இல்லம் 93 புள்ளிகளைப் பெற்று மூன்றாவதாகவும் தெரிவு செயப்பட்டன.

திருமதி சிவமலர் திவகலாலா பரிசில்களை வழங்கினார். ஆசிரியை திருமதி இ. டேறஸ் நன்றி கூறினார். (இ-51)

## பென்சிலின் மருந்து இல்லை

முல்லைத்தீவு பெப் 27 முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் பென்சிலின் ஊசி மருந்தில்லை.

இதனால் நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (இ - 92)

## வைக்கோல் கொள்வனவு விலை உயர்வு

அம்பாறை பெப் 27 தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் 1990 ஆம் ஆண்டிற்கான வைக்கோல் கொள்வனவு விலை அதிகரித்துள்ளது.

இதன் படி வைக்கோல் காற்றில் உலர்ந்த நிறையில் மெற்றிக் தொன் ஒன்றுக்கு இருநூறு ரூபாவாக விலை அதிகரிக்கப்பட்டுள்ளதென கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் இந்த வருடத்திற்கானவைக் கோல் கொள்வனவையும் கூட்டுத்தாபனம் [illegible] துள்ளது.

எழுதுவினைஞர் அதி விசேஷ தரம்:

# தமிழர் - முஸ்லிம்கள் புறக்கணிப்பு

## ஜனாதிபதிக்குப் புகார்

யாழ்ப்பாணம், பெப். 27 பொது எழுது வினைஞர் சேவை அதிவிசேஷ வகுப்பு நியமனத்தில் தமிழர் - முஸ்லீம்கள் புறக்கணிப்பு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ் - நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இ. பரராஜசிங்கம் இப்படிப் புகார் செய்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் அனுப்பியுள்ள புகார் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இந்தப்பரீட்சையில் 1988 ஆம் ஆண்டு சித்தியடைந்த 120 பேர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 3 தமிழரும், 2முஸ்லீம்களும், 15 சிங்களவரும் தெரிவு தெரிவுசெய்யப்பட்டு நியமனம் வழங்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இந்தத் தரத்தில் பல வெற்றிடங்கள் உள்ளன. ஆகவே இனவிகிதாசாரத்தின் படி நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இப்படி அவர் தெரிவித்துள்ளார். (இ-3)

## ஆஸி. தமிழ் அமைப்பு உதவி

யாழ்ப்பாணம், பெப் 27 யாழ் மாவட்டத்தில் கடந்த கால சம்பவங்களினால் பாதுகாவலர்களை இழந்து கல்வியைத் தொடர முடியாது கஷ்ட நிலையில் உள்ள ஐந்து மாணவர்களுக்கு ஆஸ்திரேலியா தமிழ் அமைப்பு உதவ முன்வந்துள்ளது.

மாதாமாதம் 500 ரூபா வீதம் பல்கலைக்கழக படிப்பு முடியும் வரை அவர்களுக்கு வழங்க இந்த அமைப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (க-3-10)

## பேடன்பவல் தினம்

யாழ்ப்பாணம், பெப் 27 சாரணிய ஸ்தாபகர் பேடன்பவல் தினம் உடுவில் மகளிர் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 31 பாடசாலைகளின் மாணவ, மாணவிகள் விழாவில் கலந்து கொண்டனர்.

விழாவில் அணிநடை, பாட்டு, நாடகம். நடனம் போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

முன்னாள் யாழ்-மாவட்ட சாரணிய ஆணையாளர் திருமதி றெஜி இராசநாயகம் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (இ-3)

காங்கேசன் முகாமிலிருந்து

## விடுவிக்கப்பட்டவர்களில் அநேகர் நோயால் பாதிப்பு

கொக்குவில், பெப் 27 காங்கேசன்துறை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த அனைவரும் விடுவிக்கப்பட்டுவிட்டனர் அல்லவா?

அவர்களில் அநேகர் ஏதோ ஒருவித பாதிப்போ அல்லது ஏதேனும் ஒரு நோயால் பீடிக்கப்பட்டவராகவே காணப்படுகின்றனர். அதிகமானோர் தோல் வியாதியால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் சிலர் இருதய நோய் மற்றும் உணவில் விருப்பமின்மை, உடல் சோர்வு, தேகமெலிவு எனப் பல்வேறு விதமான பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர்.

விடுவிக்கப்பட்டவர்களில் அநேகர் ஒரு வருடத்துக்கு மேல் சிறையில் இருந்தவர்கள் ஆவர்.

இதே வேளை விடுவிக்கப்பட்ட கொக்குவில் பகுதியைச் சேர்ந்த சிலர் நேற்று யாழ் ஆஸ்பத்திரிக்குச்சென்று சிகிச்சை பெற்றனர்.

அதே சமயம் அண்மையில் விடுவிக்கப்பட்டவரான வடமராட்சி கிழக்கு வத்தியாயன் வடக்கைச் சேர்ந்த சின்னத்துரை கோபாலகிருஷ்ணன் (கணேசன்) என்ற 21 வயதான இளைஞன் தமது வீட்டில் இருந்து பள்ளிக்குச் செல்லும் வழியில் மயக்கமுற்று வீழ்ந்து மரணமான சம்பவம் ஒன்றும் சில தினங்களுக்கு முன் இடம்பெற்றது தெரிந்ததே. (ஒ-69)

## வாகனங்களை இங்கு பதிவு செய்வதற்கு வசதி

புதிதாகக் கொள்வனவு செய்த வாகனங்களுக்கு பதிவைப் பெற யாழ் வாகனப் போக்கு வரத்துத் திணைக்களம் உதவிவருகிறது.

புதிதாகக் கொள்வனவு செய்த ஒரு வாகனத்தைப் பதிவு செய்து நம்பர் பெறுவதற்குக் கொழும்பு அலுவலகத்துக்கு வாகனத்துடன் செல்ல வேண்டும்.

இதுவரை காலமும் இந்த நடைமுறையே அமுலில் இருந்து வந்தது.

யாழ் - வாகனப் போக்குவரத்துத்திணைக்களம் இயங்க ஆரம்பித்ததன் பின் ஒருவர் வாகனத்தைப் பதிவு செய்ய கொழும்புக்கு கொண்டு செல்லத்தேவையில்லை. இங்கு வாகனத்தைக்காட்டி உறுதிப் பத்திரம் பெற்றால் போதும்.

அந்த உறுதிப்பத்திரத்தைக் கொழும்பில் கொடுத்து பதிவு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

### தையல் பயிற்சி

கொழும்புத்துறைக்கிராம இளம்பெண்களுக்குத்தொழிற்துறை ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் கொழும்புத்துறைக் கிராம அபிவிருத்திச் சங்கம் தையல் பயிற்சி நிலையம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

# தமிழீழ விடுதலைப் புலிகள் சிறந்த குறிக்கோளுடன் இயங்குகின்றனர்

## தியாகிகள் அஞ்சலிக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், பெப். 27 தமிழ் மக்களுக்காக போராடுவதாகக் கூறும் மற்றைய இயக்கங்கள் எந்த விதக் குறிக்கோளும் இன்றிச்செயல்பட்டன. ஆனால் சிறந்த குறிக்கோளுடன் விடுதலைப் புலிகள் இயங்கிவருவதால் தான் தமிழர் போராட்டத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

இப்படிக்கூறினார் யாழ் மாவட்ட தளபதியாக விருந்து வீரமரணமடைந்த ராதாவின் தந்தையார் கனகசபாபதி.

நேற்று முன்தினம் மாலை நாச்சிமார் கோவிலுக்கு முன் நடந்த தியாகிகளின் அஞ்சலிக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமரர் ராதாவின் சகமாணவரான மகேந்திரராசா பேசுகையில், இன்று எம் மண்ணை மீட்க இளைஞர்களும், யுவதிகளும் போராடுகிறார்கள் அதே வகையில் தான் விடுதலைப்புலிகளும் போராடுகிறார்கள்.

மற்றைய இடங்களைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் [illegible] வரப்போகிறார்கள் என்று [illegible] கண்டார்கள் அக்கனவு இன்று நனவாகிவிட்டது என்று கூறினார்.

பல்கலைக்கழக மாணவர் ஆர். மோகன், பேசுகையில் தேசவிடுதலையில் பல்கலைக் கழக மாணவர்களின் பங்கு முக்கியமானது. ஆகவே பல்கலைக்கழகத்தில் பயின்றாலும் மக்கள் போராட்டத்தில் மாணவர்கள் ஈடுபட வேண்டும் என்றார்.

விடுதலைப்புலிகளின் மகளிர்பிரிவைச் சேர்ந்த செல்வி ஆர்த்தி பேசுகையில் தமிழ் மக்களை எமக்கு அளிக்கும் ஆதரவு மூலம் கிடைத்துள்ள ஆத்மபலமே எம் வெற்றிக்குக்காரணம். உலகில் நாலாவது வல்லரசு நாடே எம்முடன் நின்று போராட முடியாது ஓடுகிறது. அத்துடன் எத்தனை கோடி நஷ்டத்தை அந்த வல்லரசு எதிர் நோக்கியது.

நாம் இந்திய மக்களுக்கோ இந்திய அரசுக்கோ எதிரானவர்கள் அல்லர். மக்களை அழிக்க முனையும் இந்தியப் படைக்கும், இந்திய அரசுக்கும் எதிரானவர்கள்.

உலகத்தில் கெரில்லாப் போரில்ஈடுபட்டுள்ள பல்வேறு குழுக்களுக்கு பல நாடுகள் உதவி செய்து வருகின்றன. ஆனால்எமக்கு எந்த அன்னிய உதவியும் இல்லைமக்கள் ஆதரவுதான் உண்டு என்றார்.

மாணவர் அமைப்பைச் சேர்ந்த சிவபாலன் உட்படப் பலர் உரையாற்றினார்கள், வில்லிசையும் இடம் பெற்றது. (இ-3)

## வாசகர் திருமுகம்

### அதிகாரிகளின் அநியாயம்

யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் அகதிகளுக்கு கட்டிக் கொடுக்கும் வீடுகளுக்கு தம்மால் கட்டிடப் பொருட்கள் வழங்க முடியாதெனவும், எங்களையே அவற்றை வாங்கும்படியும் தே. வீ. அ. அ. ஊழியர்கள் பணித்தனர். நாம் கடன்பட்டு கட்டிடப் பொருள்கள் வாங்கி வீட்டை நிர்மாணித்தோம். மாதம் பலவாகியும் எமக்குரிய பணத்தைத் தராமல் காலங்கடத்துகின்றனர். இப்போது பணத்தை தராமல் தரக் குறைவான கட்டிடப் பொருள்களை எமக்குத் திணிக்கின்றனர்.

இக்கொடுமைகளைக் கேட்போர் இல்லையா?

சி. ஐயாத்துரை
செ. கந்தையா

### கடன் சபைப் பணம்

அரசினால் ஏற்படுத்தப்பட்ட கடன் சபைகள் ஒழிக்கப்பட்டு ஊழியர்கள் செலுத்திய பணம் திருப்பி வழங்கப்பட்டன. ஆனால் ஆசிரியர்களில் பலர் இன்றும் செலுத்திய பணத்தை மீளப் பெறாமல் தவிக்கின்றனர்.

நான் யூன் 1988 இல் ஓய்வு பெற்றேன்- இறுதியாக கற்பித்த பாடசாலை பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம். இங்கு மாற்றப்பட முன்னர் கற்பித்த பாடசாலை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி. இரண்டும் யாழ். மாவட்டத்திலேயே உள்ளன.

எனினும் வடமராட்சி கோட்டக் கல்விக் காரியாலயமும் யாழ். கல்வித் திணைக்களமும் எனது பணத்தை மீளத் தருவதைக் கால தாமதம் செய்கின்றன. இதுபற்றி எழுதிய கடிதங்களுக்குப் பதில் இல்லை. நேரில் கண்டு பேசியும் பிரயோசனமில்லை.

வே. கிருஷ்ணன்
அல்வாய்.

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் பெப். 27 ''இலங்கை அரசியற்பொருளாதாரம் 1948 – 1956 வர்க்க இனத்துவ நிலைப்பாடுகள்'' என்ற நூல் வெளியீடு எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை மாலை 3 – 00மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

யாழ். பல்கலைக் கழக பொருளியற் துறைத் தலைவர் திரு. வி. நித்தியானந்தனால் எழுதப்பட்ட இந் நூலை யாழ். பல்கலைக் கழக கலைப்பீடம் வெளியிடுகிறது.

யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு- ந. பேரின்பநாதன் வைபவத்துக்குத் தலைமை வகிப்பார். (இ)

## கண்டதும் கேட்டதும்

வவுனியாவில் ஒரு பாடசாலை. அந்தப் பாடசாலையில் படிக்கும் மாணவனுக்குத் திடீரென ஓர் ஆசிரியர் பிழை கண்டுபிடித்து அடித்தாராம்.

முன்பு எல்லாம் அந்த ஆசிரியர் தமக்கு அடிக்கமாட்டாரே என எண்ணிய மாணவன், முன்னரைவிட வேகமாகப் படிக்கத் தொடங்கினான். ஆனால் அடி இடையிடையே தொடர்ந்து விழுந்தது, மாணவனுக்கு முதலில் அடியின் அர்த்தம் புரியவில்லை; காரணம் தெரியவில்லை.

போகப்போக காரணமும் தெரிந்தது அர்த்தமும் புரிந்தது.

குறிப்பிட்ட ஆசிரியர் ஒரு 'ரியூட்டரி' நடத்துகின்றார். பாடசாலையில் படிக்கும் மாணவர்கள் எல்லோரும் அவரின் 'ரியூட்டரி'யிலும் படிக்கிறார்கள். திடீரென அந்த மாணவன் 'ரியூட்டரியில்' படிப்பதை நிறுத்திவிட்டான். அதனால்தான் அந்த அடிகள் தொடர்ந்து விழுந்தன!

— செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எகிப்து - லிபிய உறவு

கெய்ரோ பெப் 26

லிபிய ஜனாதிபதிகேர்ணல் மும்மார் கடாபி எகிப்துக்கு விஜயம் செய்தார். ராஜரீக உறவுகளை விருத்தி செய்வதே இதன் நோக்கம் என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த 20 ஆண்டுகளுக்கு பின்னர் துண்டிக்கப்பட்ட ராஜரீக உறவை லிபியா கடந்த ஆண்டு எகிப்துடன் புதுப்பித்துக் கொண்டது தெரிந்ததே. (எ)

# மாநிலங்கள் பிரிந்து போக ரஷ்யாவில் கருத்துக் கணிப்பு

மாஸ்கோ, பெப் 26

சோவியத் யூனியனில் இருந்து மாநிலங்கள் பிரிந்து செல்வதைத் தீர்மானிக்க சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதற்கு வகை செய்யும் சட்டமூலம் ஒன்று மாஸ்கோ அரசு சோவியத் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

அந்த மாநிலத்தில் வாழும் வயது வந்தோர்களில் முக்கால் பங்கினர் பிரிந்து செல்வதற்கு வாக்களித்தால், அந்த மாநிலம் சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து செல்ல முடியும்.

தற்போதைய சோவியத்யூனியன் அரசமைப்பில் யூனியனில் உள்ள 15 மாநிலங்களும் பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டுள்ளது; ஆனால் அந்த உரிமையை எப்படி அனுபவிப்பது என்பது பற்றி அரசமைப்பில் குறிப்பிடப்படவில்லை.

அந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யவே புதிய சட்டமூலம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. (எ)

## கொலை முயற்சி

பங்களாதேஷ் தேசியவாதக் கட்சித் தலைவி பேகம் கலேடாஸியா கொலை முயற்சி ஒன்றில் இருந்து உயிர் தப்பினார் என்று அறிவிக்கப்படுகிறது.

டாக்கா பல்கலைக் கழகத்துக்கு நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளச் சென்ற சமயம் அவர் மீது துப்பாக்கி மனிதர்கள் சுட்டனர்.

## இந்திரா கொலை புலனாய்வுக்குழு கலைக்கப்படும்

இந்திராகாந்தி படுகொலை குறித்து விசாரணை நடத்த அமைக்கப்பட்ட விசேட புலனாய்வுக்குழுவைக் கலைக்கும்படி மத்திய அரசு உத்தரவிட்டிருக்கிறது.

இந்திரா காந்தி 1984 ஆம் ஆண்டு அக்டோர் 30 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டார். மறுநாளே இந்தக் குழு அமைக்கப்பட்டது. (எ)

## தமிழ் நாட்டில்

# 2ஆவது ஆட்சி மொழியாக தெலுங்கு இடம்பெறுமா?

சென்னை, பெப் 26

தமிழகத்தில் தெலுங்கு மொழியை இரண்டாவது ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்று தெலுங்கர் சங்க மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மன்னர் திருமலை நாயக்கரின் 407 ஆவது பிறந்த நாள் விழாவை ஒட்டி மதுரையில் தெலுங்கர் சங்க மாநாடு நடந்தது.

தமிழ் நாட்டில் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட நாற்பது சதவீத மக்கள் வசிக்கின்றனர். தமிழக அரசின் கல்வி, வேலை வாய்ப்புக்களில் இவர்களுக்கு 40 சதவீத இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று தமிழக அரசைக் கோரும் தீர்மானமும் இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை—

தமிழை உத்தியோகமொழியாக்கும் சட்டத்தை அமுல் நடத்தும்படி கோரி கடந்த சனிக்கிழமை தலைநகர் தமிழ்ச் சங்கம் என்ற அமைப்பு ரிப்பன் கட்டடத்தில் இருந்து அண்ணாசாலையில் உள்ள பெரியார் சிலைவரை ஊர்வலம் ஒன்றை நடாத்தியது.

தமிழக அரசு நடத்தும் பரீட்சைகளில் தமிழைக் கட்டாயமாக்குமாறும் இச்சங்கம் கேட்டுள்ளது. (எ)

## இந்தியத்தூதராக பிரிட்டனில் குல்தீப்

இந்தியாவின் பிரபல பத்திரிகையாளரான திரு. குல்தீப் நய்யாரை பிரிட்டனுக்கு தூதராக நியமிக்க புதுடில்லி அரசாங்கம் தீர்மானித்து இருக்கிறது.

பிரிட்டனில் இந்தியத் தூதராகப் பணி புரித்த திரு. எம். கே. ரஷ்கோத்திரா, தேசிய முன்னணி அரசு பதவிக்கு வந்ததைத்தொடர்ந்து ராஜினாமாச் செய்து விட்டார்.

திரு. நய்யாரின் நியமனம் பற்றிய முறையான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும். என்று தெரிகிறது. (எ)


## ★ COMPUTER PROGRAMMING ★

Basic Programming Course இற்கான

புதிய பிரிவுகள்

28 - 02 - 1990 (Wed & Thu BATCH)

03 - 03 - 1990 (Sat & Sun BATCH)

9.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

IDP COMPUTER CENTRE

342, K.K.S. Road, Jaffna.

★ IDP மல்லாகம் கிளையில் 4.00 மணிக்கு புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

★ D - BASE III + பயில இருப்பவர்கள் முன்கூட்டியே உங்கள் பெயர்களை யாழ்நகர் அலுவலகத்தில் பதிவுசெய்து கொள்ளலாம்.

(சி-3910)

## Walk - in - Interview

Suitable Candidates are invited for an walk-in Interview to fill the following Vacancies:-

1. **Cashier Cum Bill Clerk Male/Female:**
   Knowledge of Accounts must be Proficient in English.
2. **Accounts Clerk:**
   Male/Female knowledge of Accounts and Book-keeping.

**Age Limit: 20years to 30 years**

Please Call over between 10 a.m. to 5 p m. on 27th & 28th Feb. 90 with written Application along with relevent document.

# Hotel Gnanams

299, Clock Tower Road,
Jaffna.

[C-3915]


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்லப்பா செபஸ்ரியாம்பிள்ளை

[இளைப்பாறிய ஆசிரியர்]

தோற்றம்: 28 - 05 - 1915 மறைவு: 27 - 02 - 1988

மரணபரியந்தம் எம்மை நேசித்தார்; சீவியத்தில் நாம் அவரை நேசித்தோம்; மரணத்தின் பின் மறவாதிருப்போமாக.

இவரின் பிரிவால் துயருறும்:
சகோதரர், மைத்துனர், மைத்துனிமார், பிள்ளைகள்: மருமக்கள், பேரமக்கள்.

12, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். [11827


# TV TRAVELS & TOURIST

## உடனடி வேலைவாய்ப்பு

### ★ SAUDI Operation & Maintenance Co. Ltd.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | CIVIL ENGINEER | 1600 | — | 1900 |
| 1 | MECHANICAL ENGINEER | 2000 | | |
| 1 | TELEPHONE TECHNICIAN | 9000 | — | 1000 |
| 2 | GENERAL ELECTRICIAN | 650 | — | 700 |
| 1 | ELECTRONICS TECHNICIAN | 900 | — | 1000 |
| 2 | AUTO ELECTRICAL TECHNICIAN | 800 | — | 900 |
| 2 | PUMP MECHANIC | 700 | — | 900 |
| 1 | ELECTRICAL TECHNICIAN | 600 | — | 700 |
| 1 | LAUNDRY SECTION HEAD | 700 | — | 750 |
| 1 | GENERAL ELECTRICIAN | 600 | — | 700 |
| 3 | PLUMBER | 600 | — | 700 |
| 19 | FEMALE PORTERS | 300 | | |
| 21 | PORTERS | 300 | | |
| 2 | PAINTER | 500 | — | 600 |
| 2 | AUTO WORK SHOP LABOURERS | 300 | | |
| 1 | TAILOR | 600 | — | 700 |
| 6 | WASHER | 300 | | |
| 3 | LAUNDRY PRESS LABOURERS | 600 | — | 700 |
| 5 | LAUNDRY LABOURERS | 300 | | |
| 5 | LABOURER CIVIL SECTION | 300 | | |

வயது எல்லை 21 — 47

நேர்முகப் பரீட்சை: 06 - 03 - 1990

### ★ KUWAIT

30 RESTAURANT WAITER உடன் தேவை. உணவு. தங்குமிடம் இலவசம்.

வயது எல்லை 18 — 40

சம்பளம்: 30 K.D

| | | |
|---|---|---|
| 40 | DRIVERS | — 55 K.D |
| 60 | HEAVY VEHICLE DRIVERS | — 70 K.D |
| 5 | MECHANICS | — 90 K.D |
| 3 | TYREMAN | — 0 K.D |
| 1 | SECRETARY (Female) | — 145 K.D |

ஆண்கள் வயது: 20 — 47 பெண்: 25 — 35

கடவுச்சீட்டு, 3 பாஸ்போர்ட் சைஸ் படம், அனுபவச்சான்றிதழ் என்பவற்றுடன் உடன் எமது காரியாலயத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

Front of Railway Station
**Brown Road, Kokuvil**

#### அறிவித்தல்

எம்மிடம் சவூதி, குவைத்நாட்டிற்கு செல்வதற்கு கடவுச்சீட்டு தந்தவர்கள் அனைவருக்கும் 07-03-1990இல் பயணம் உள்ளதால் உடன் எமது காரியாலயத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

நன்றி

(இ39/09)


## கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்

### இசுசு லொறி என்ஜின் விற்பனை

26 தொடர் இலக்கம் கொண்ட இசுசு லொறியின் பாவித்த என்ஜினும், கியர் பெட்டியும் சேர்த்து விற்பனை செய்யப்படவுள்ளது.

இதற்கான விலை மனுக்கள் 90-03-10ஆம் திகதிக்கு முன் ஏற்றுக்கொள்ளப்படும். மேற்படி பொருட்களைச் சங்க இரும்பு நிலையத்தில் பார்வையிடலாம். மேலும் தேவையான விபரங்களைச் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்.

கரவெட்டி,
27 - 02 - 90 (சி-3916)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 18 - 10 - 1915

★●★●★●

மறைவு: 29 - 01 - 1990

### திரு. ஆறுமுகம் குமாரசாமி

(ஓய்வுபெற்ற பிரதம சிறாப்பர் திறைசேரி)

எங்கள் அன்பான தந்தையே! எங்களை அன்புடனும், நேர்மையுடனும், வாழ, இப்புவியில் பண்புடனும், பாசத்துடனும், நல்வழிகாட்டி வளர்த்து, கண் இமைபோல் காத்து, உங்கள் புன்னகை தவழும் இனிய முகம் என்றென்றும் எம்நெஞ்சை விட்டகலாதப்பா!

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

3ஆம் கட்டை,
K.K.S. றோட்,
கொக்குவில். (2615)

## அந்தியேட்டி கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

### திரு. வேலும்மயிலும் சோதிநாராயணசாமி

(பரஞ்சோதி அப்பா)

அன்னை மடியில்: 13 - 02 - 1938 ஆண்டவன் அடியில்: 30 - 01 - 1990

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் விளங்கி எங்களை பாசத்துடன் பாதுகாத்து வந்த எங்கள் குலவிளக்கு அணைந்ததைக் கேள்வியுற்று வந்து மரணச் சடங்கில் பங்கு பற்றியோருக்கும் எங்கள் ஆறாத்துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியோருக்கும் உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நாம் நன்றி நவில்வதுடன் 28-02-90 புதன்கிழமை அதிகாலை நடக்கவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் பங்கு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக அனுதினமும் இறைவனை பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள், மருமக்கள், பெற்றார், பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள், மைத்துனர், மற்றும் உறவினர்.

சின்னமலை,
தொண்டமானாறு, வல்வெட்டித்துறை. [2592]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதாவின் உடல் நிலையில் வேறு சிக்கல்கள் ஏற்படும் ஆபத்து

## அவரது நிலைமை பற்றி டாக்டர் விவரிப்பு

சென்னை, பெப். 27

விபத்தில் காயமடைந்த அ. இ. மு. க பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா சென்னை தேவகி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றி மருத்துவ மனையின் நிர்வாக இயக்குநரான டாக்டர் கே. சொக்கலிங்கம் செய்தியாளர்களிடம் விவரித்தார்.

டாக்டர் சொக்கலிங்கம் சொன்னதாவது:-

தற்போது ஜெயலலிதாவை மருத்துவ மனையில் இருந்து விடுவிப்பது பற்றி நினைக்கவே முடியாது.

சிறிது காலம் மருத்துவ மனையில் தங்கி அவர் சிகிச்சை பெற்றாக வேண்டும். வைத்திய கண்காணிப்பின் கீழ் அவர் சிறிது காலம் இருந்தாக வேண்டும். சில சமயம் அவரது உடல் நிலையில் வேறு பல சிக்கல்கள் ஏற்படலாம்.

சனிக்கிழமை காலை 5 மணியளவில் ஜெயலலிதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் அவருடன் அவரது உதவியாளர் திருமதி சசிகலா நடராஜன், கார் சாரதி அண்ணாதுரை ஆகியோரும் அனுமதிக்கப்பட்டனர்.

### ஜெயலலிதாவின் காயங்கள்

விபத்து நடந்தபோது ஜெயலலிதா காரின் பின் ஆசனத்தில் நித்திரையாய் இருந்தார்

சசிகலா முன் ஆசனத்தின் இடதுபக்கத்தில் அமர்ந்து இருந்தார்.

மோதலில் ஏற்பட்ட தாக்கம் காரணமாக ஜெயலலிதா பின் ஆசனத்தில் இருந்து காரின் உள்ளே - கீழே - விழுந்தார். அவர் அப்போது தனது இடது கையால் காரின் கீழ்ப் பகுதியில் ஊன்றிக் கொண்டார் அதனைத்தொடர்ந்து அவரது உடல் முழுவதும் உரசல் மற்றும் கீறல் காயங்கள் ஏற்பட்டன.

அவரின் முகத்தில் கீழ்த் தாடையின் இணைப்பில் வெடிப்பு ஏற்பட்டதற்கான அறிகுறிகள் தென்பட்டன. பற்களைச் சேர்த்துக் கடிக்க முடியாத அளவு நோவு இருப்பதாக ஜெயலலிதா முறையிட்டார்.

இடது கை மணிக்கட்டில் பலத்த நோவு, இரண்டு முழங்கால்களிலும் காயங்கள் முதுகின் கீழ்ப்பக்க நோவு ஆகியவற்றாலும் ஜெயலலிதா பாதிக்கப்பட்டுள்ளார்.

### சசிகலாவின் காயங்கள்

ஜெயலலிதாவுடன் காருக்குள் இருந்த அவரது உதவியாளர் சசிகலாவுக்குப் பாரதூரமான காயங்கள் ஏற்பட்டன. அவர் இடது கண் பார்வை இழக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

கண்ணாடிச் சிதறல்கள் சில சசிகலாவின் கண்ணுக்குள் ஏறின. மூன்று கண்ணாடித் துண்டுகள் அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றப்பட்டு விட்டன.

சசிகலாவின் இடது கண் மணிக்கு அருகில் இன்னும் சில கண்ணாடித் துண்டுகள் இருப்பது கண்ணை 'ஸ்கான்' செய்து பார்த்தபோது தெரிய வந்தது. அதை அகற்றுவதற்கு நாம் தற்போது முயற்சிக்கவில்லை.

கன்னத்திற்கும் கண்ணுக்கும் இடையே ஆழமான வெட்டுக் காயம் ஏற்பட்டுள்ளது. பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை நிபுணரே அதற்கு சிகிச்சை அளிக்க முடியும். நரம்பியல் நிபுணர் ஒருவரின் சேவையையும் பெற உள்ளோம்.

ஜெயலலிதாவுக்கும் சசிகலாவுக்கும் மூளையில் இரத்தப்பெருக்கு ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டுபிடிக்க 'ஸ்கான்' செய்ய உள்ளோம்.

ஜெயலலிதாவின் தனிப்பட்ட வைத்தியர் என்ற முறையில் இன்னும் சிலவற்றைச் சொல்ல வேண்டும். அவர் சிறிது காலமாக உடல் நலமின்றி இருந்து வருகிறார். அதனால் அவரைச் சிறிது காலம் ஓய்வு எடுக்கும்படி கூறியிருந்தேன்.

பழனி, பாண்டிச்சேரி தேர்தல் பிரசாரத்துக்குப் போக வேண்டும் என்று அவர் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதால், தாதி ஒருவரையும் அழைத்துச் செல்லும்படி அவருக்குக் கூறினோம்.

அவரின் காரின் சாரதி அண்ணாதுரைக்கும் காயங்கள் பல ஏற்பட்டுள்ளன.

- இப்படி டாக்டர் சொக்கலிங்கம் சொன்னார். (உ-9)

## கலைஞரின் முயற்சி....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல வாரங்களாக பல தமிழ் அமைப்புக்களுடன் பல தடவை நான் பேச்சுக்கள் நடத்தினேன்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையை அதன் முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாளே தாமாக முன்வந்து கலைக்க வேண்டும் என்றும் அதற்குப் பின்னர் 4 அல்லது 5 மாதங்களின் பின்னர் சுயேச்சையான தேர்தல்கள் நடைபெற வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் இயக்கம் தெரிவித்தது.

இதற்குப் பதிலாக ஈ. பி. ஆர். எல். எப். இயக்கமோ, "இப்போதைய மாகாண சபை உறுப்பினர்களை இராஜினாமாச் செய்ய வைத்துவிட்டு அவற்றில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை நியமிக்கத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டது.

இந்த யோசனையை விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் தெரிவித்தேன். அதற்கு — மக்கள் ஆதரவு தங்கள் இயக்கத்துக்கு இருப்பதாகவும் அதை நிரூபித்துக் காட்டும் வகையில் தேர்தல்கள் நடப்பதே முறையானது – என்றும் விடுதலைப் புலிகள் பதிலளித்தனர்.

இந்தப் பின்னணியில் நேற்று (திங்கள்) சந்தித்த ஈ. பி. ஆர். எல். எப். குழு முதல் தடவையாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு 19 நிபந்தனைகளை விதித்துள்ளன.

மாகாண அரசு வெளிநாட்டுத் தொடர்பை வைத்துக் கொள்வது போன்ற யோசனைகளை இந்தியாவும் இலங்கையும் ஏற்று இடைக்கால அரசு ஏற்பட்டு அதன் பிறகு தேர்தலை நடத்த வேண்டும் என்று இந்த யோசனைகளில் கூறப்பட்டிருக்கிறது.

இந்த 19 நிபந்தனைகள் என்ன என்பதை நான் வெளியிடவில்லை.

இந்தப் பின்னணியில் போராளிகளிடையே ஒற்றுமையின்மை இருப்பதால் நான் மேற்கொண்ட முயற்சிகளுக்கு தடங்கல் ஏற்பட்டுள்ளது.

அதே சமயம் நான் மேற்கொண்ட முயற்சிகளால் ஈழத்தில் தமிழர் ரத்தம் சிந்துவது குறைந்துள்ளதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்திய அமைதிப் படை திரும்புவதைத் தவிர வேறு வழி இல்லை.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி சென்ற டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குள் அமைதிப் படை வாபஸ் வாங்கும் என்று கூறியிருந்தார். இன்றைய மத்திய அரசு மார்ச் 31 ஆம் திகதிக்குள் அமைதிப்படையை விலக்கிக்கொள்ள இருக்கிறது.

தமிழர் இரத்தம் சிந்தாமல் இருக்கப் போராளி அமைப்புக்களிடையே ஒற்றுமை அவசியமாகிறது.

இப்படி திரு. கருணாநிதி சொன்னார்.

நேற்று நடந்த பேச்சுக்களின் போது மத்திய அமைச்சர் முரசொலி மாறனும் கலந்து கொண்டார்.

முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாளும் ஈ. பி. ஆர். எல். எப். செயலாளர் திரு. கே. பத்மநாபாவும் கூட்டாக எழுதிய கடிதம் ஒன்று முதலமைச்சர் கருணாநிதியிடம் பேச்சுக்களின் போது கொடுக்கப்பட்டது.

ஈ பி. ஆர். எல் எவ் இயக்கம் தெரிவித்திருக்கும் 19 யோசனைகள் பற்றி அரசியல் நோக்கர்கள் வியப்புத் தெரிவித்தனர் என்று இந்திய வானொலி தெரிவித்தது.

1954 ஆம் ஆண்டில் இருந்து ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளை உள்ளடக்கிய இந்தப் பிரேரணைகள் கடைசி நேரத்தில் கொடுக்கப்பட்டிருப்பது இன்னும் இரண்டு மாதங்களுக்குள் தமிழ் அமைப்புக்களுக்கு இடையே ஒற்றுமை நிலவ வேண்டும் என்ற நல்லெண்ணத்துக்கு ஊறு விளைவிப்பதாக இருக்கும் என்று அரசியல் பார்வையாளர்கள் சுட்டிக் காட்டினார்கள் என்றும் இந்திய வானொலி தெரிவித்தது. (ஒ-எ)


## முன்கூட்டியே பதிவு செய்க

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் தினசரி பத்திரிகைகளுக்கும் வாரப்பத்திரிகைகளுக்கும் மாத சஞ்சிகைகளுக்கும் முன் கூட்டியே பதிவு செய்க

★ பத்திரிகைகள் வீடுகளில் பெறுவதற்கும் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

குயிலநாதன் நியூஸ் ஏஜென்சி

நாவலடி, அல்வாய்.

[சி-3410]


## கைதான...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ஏனைய மூவருக்கும் தலா ஒருலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அத்துடன் அமெரிக்க டொலர்களும், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட படகும் பறிமுதல் செய்யப்பட்டன.

அபராதம் கட்டத் தவறியதால் நால்வரும் பின்னர் கொழும்பு துறைமுகப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்

## எதிர்க்கட்சி. . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் மாவை சேனாதிராசா, திரு. இராஜேந்திரன், ஈ. பி. ஆர். எல். எவ், சார்பில் திரு. பிரேமச்சந்திரன் எம். பி , திரு. சிவஞானம், தமிழ்க் காங்கிரஸ் சார்பில் திரு. குமார் பொன்னம்பலம், திரு. மோதிலால் நேரு ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஒ)

## இலங்கை-இந்திய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டில்லியிலா இடம் பெறும் என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

பெரும்பாலும் கைச்சாத்திடும் வைபவம் புதுடில்லியில் இடம் பெறும் என்று தெரிகிறது.

மார்ச் 31ஆம் திகதிக்கு முன் அமைதிப்படைவிலக்கப்படும். என்ற உறுதிமொழியை பிரதமர் சிங் நிறைவேற்றுவார் என்று இலங்கை அரசு நம்புகின்றது.

"திட்டமிட்டபடி படை வாபஸ், இல்லையேல் நட்புறவு உடன்பாடும் இல்லை" — இது தான் இலங்கை அரசின் நிலைப்பாடு [illegible] தெரியவருகிறது. [illegible]

## ஈ. பி. ஆர். எல். எவ்....

(5 ஆம் பக்கம் பார்க்க)

டும்.

4) இத்திட்டத்தையும் காலக் கெடுவையும் ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக்கொள்ளும்பட்சத்தில்-

இந்திய அரசும், தமிழக அரசு, ஸ்ரீலங்கா அரசு மற்றும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு திட்ட அமுலாக்கல் மேற்பார்வைக் குழு ஒன்றை உருவாக்குதல் வேண்டும்.

அக்குழு வடக்கு, கிழக்கு மாகாணத்திலிருந்து செயற்பட வேண்டும்.

5) அத்திட்டத்தையோ, காலக்கெடுவையோ ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் அல்லது அக் காலக் கெடுவுக்குள் நிறைவேற்றாத பட்சத்தில் -

இந்திய அரசு "சுதந்திர ஜனநாயக ஈழக் குடியரசை அங்கீகரித்து அதனை ஸ்தாபிப்பதற்கும் பாதுகாப்பதற்குமான அனைத்து ஆதரவுகளையும் உதவிகளையும்வழங்குவோம் என அறிவிக்க வேண்டும் — என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தினர் தமது யோசனையில் இலங்கை அரசினால் நிறைவேற்றப்பட வேண்டியதாகக் குறிப்பிட்டு 19 நிபந்தனைகளையும் விதித்திருக்கின்றனர். அந்த நிபந்தனைகளுள் சில வருமாறு:-

★ 1977 இற்குப் பின்னர் வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் அகற்றப்பட வேண்டும்.

★ வடக்கு, கிழக்கில் சில பகுதிகளில் முற்றாக சிங்களக் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்தப்பகுதிகளை சிங்களப் பிரிவுகளாக்கி அதற்கு ஈடான காணிகள் சிங்களப் பகுதியிலிருந்து தமிழ் பிரதேசத்துக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

★ வடக்கு, கிழக்கு இணைப்பு நிரந்தரமாக்கப்பட வேண்டும்.

★ இன விகிதாசாரப்படி ஆள்சேர்ப்பு இடம்பெறவேண்டும்.

★ வடக்கு, கிழக்கில் உள்ள காணிகள் முற்றும் முழுதாக மாகாணசபையின் அதிகாரத்துக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

★ திருகோணமலைகோணேசர் ஆலயப் பகுதியை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்த வேண்டும். அது அமைந்துள்ள "பிரடெரிக்" கோட்டையிலிருந்து ஸ்ரீலங்கா இராணுவம் அகற்றப்பட வேண்டும்.

★ பலாலி இராணுவ முகாம், காரைநகர் கடற்படை முகாம், தள்ளாடி இராணுவ முகாம், வவுனியா இராணுவ முகாம், திருமலை கடற்படை முகாம், திருமலைவிமானப்படை முகாம், அம்பாறை கொண்டை வெட்டுவான் இராணுவ முகாம் ஆகிய ஏழு இடங்களைத் தவிர தமிழர் பிரதேசத்தில் வேறு எந்த இடத்திலும் ஸ்ரீலங்கா படை முகாம்கள் இருக்கக்கூடாது.

★ தமிழர் பிரதேசத்தில் மாகாண முதல்வரின் முன் அனுமதியின்றி சட்டம், ஒழுங்கு விடயங்களில் ஸ்ரீலங்கா அரச படையினர் ஈடுபடக்கூடாது

★ இலங்கையிலிருந்து பாகிஸ்தான், தென்னாபிரிக்க, பிரித்தானிய, அமெரிக்க உளவுப் படைகளும், எஸ். ஏ. எஸ், இஸ்ரேலிப் படையினரும் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

★ தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து ஸ்ரீ லங்கா அரசின் விசேட அதிரடிப் படையினர் அகற்றப்படவேண்டும்.

★ பயங்கரவாத தடுப்புச் சட்டம், அவசரகாலச்சட்டம் ஆகியவை நீக்கப்பட்டு அவற்றின் கீழ் கைதான அனைவரும் விடுவிக்கப்படவேண்டும்.

★ மலையக மக்கள் சிங்கள இன வெறியர்களினால் அடக்கப்பட்டுள்ளனர். மலையகத்தில் மலையக மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட மலையக மாகாண சபை ஒன்று புதிதாக அமைக்கப்பட வேண்டும்.

அத்தகைய மாகாண சபை உருவாக்கப்பட்டால், கிழக்கில் கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாகாணசபையை உருவாக்க தமிழர்கள் ஒத்துழைப்பார்கள்.

இத்தகைய மாகாணசபைகள் இரண்டுக்கும் ஆகக்குறைந்தது நிலவுரிமை, பொருளாதார உரிமை, அடிப்படை அரசியல் உரிமை, சமய, கலாசார, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சமூக நலன்கள் சம்பந்தமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

— இத்தகைய நிபந்தனைகள் எல்லாம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் இடைக்கால மாகாண அரசு ஒன்றை உருவாக்க நாம் சம்மதிப்போம்.

இடைக்கால மாகாண அரசு செயற்பட்டு ஒரு வருடம் கழித்து — 1991 மார்ச் மாதத்தில் ஆயுதமற்ற, ஜனநாயகபூர்வமான சூழலில் ஒரு தேர்தலை நடத்தி புதிய மாகாண சபையைத் தெரிவு செய்யலாம்.

இத்தகைய இடைக்கால அரசு அமைக்கப்படும்போது தற்போதைய மாகாணசபையில் தமிழ்க் கட்சிகள் வசம் உள்ள 55 ஆசனங்களையும் தமிழக முதல்வரின் விருப்பப்படி தமிழ்க் கட்சிகளுக்குப் பகிர்ந்து கொடுக்கலாம்.

இடைக்கால அரசில் ஒரு கட்சி ஆட்சியே வேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகள் விரும்புவார்களாயின் தற்போது எமது வசமுள்ள 38 ஆசனங்களையும் அவர்களுக்கு விட்டுக்கொடுக்க நாம் தயார்.

இணக்க நிலை ஏற்பட்ட பின்—

1. எந்த ஒரு தமிழ் மகனுக்கு எதிராகவும், எந்த ஒரு கட்சியும் தான்தோன்றித்தனமாக, சட்டபூர்வ மற்ற முறையில் நடந்துகொள்ளக் கூடாது.

2. அடிப்படை உரிமைகளான பேச்சுரிமை, எழுத்துரிமை, ஒன்றுகூடி செயற்படும் உரிமை ஆகியவற்றுக்கு எதிரான நடவடிக்கை முற்றாக நிறுத்தப்படவேண்டும்.

3. இதுவரை காலமும் நிலவிய நிலைமை காரணமாக ஸ்ரீலங்கா படையினராலோ அல்லது வேறு குழுக்களினாலோ தமிழர்கள், முஸ்லிம்கள், அல்லது தமிழ் கட்சியினர் தமக்கு உயிராபத்து ஏற்படும் என்று அஞ்சினால் அவர்களுக்கு இந்திய அரசு அரசியல் தஞ்சம் கொடுக்க வேண்டும்—என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ)

## புலிகள் கட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாப்பு விதிகளை அறிமுகம் செய்து திரு. மகேந்திரராசா பேசுகையில் —

கட்சியின் அமைப்பு விதிகளைக் கொண்ட யாப்பு ஜனநாயக முறையில் அமையப்பெற்றிருப்பதாகச் சுட்டிக் காட்டினார்,

ஒரு பலம் பொருந்திய தேசிய கட்சியைக் கட்டியெழுப்புவதற்கு இது ஒரு அத்திவாரமாகத் திகழும் எனறும் சொன்னார்.

எமது கட்சி ஒரு மக்கள் இயக்கமாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். அதன் வாயிலாக தமிழ் முஸ்லீம் மக்கள் அரசியல் நீரோட்டத்தில் நேரடியாகப் பங்கு கொண்டு, எமது போராட்டத்தை முனைப்புடன் முன்னெடுக்க நாம் அவர்களுக்கு வாய்ப்பளிக்கின்றோம் – என்றார்.

"எமது விடுதலை இயக்கம் 17 ஆண்டுகால வரலாற்றுப் பரிமாணத்தைக் கொண்டு வளர்ந்திருக்கின்றது நீண்ட காலமாகவே எமது புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை நாம் முன்னெடுத்து வந்த போது எமது அரசியல் பிரிவு ஒரு தலைமறைவு அமைப்பாகவே செயற்பட்டு வந்தது; யதார்த்த புற நிலைகள், [illegible] நாம் [illegible] பாதையை நெறிப்படுத்தி வந்தோம்.

இன்றைய புதிய வரலாற்றுச் சூழ்நிலையில் நாம் ஜனநாயக வடிவத்தில் எமது போராட்டத்தை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கின்றது. இதனால் நாம் இப்பொழுது எமது அரசியல் அமைப்பை ஜனநாயகக் கட்சியாகப் பதிவு செய்து வெளிப்படையாக இயங்க முன்வந்துள்ளோம்.

எமது கட்சியும் அதன் செயற்பாடுகளும் எமது தேசிய விடுதலை இயக்கத்திற்கு மேலும் மெருகூட்டி பலப்படுத்துவதாக அமைய வேண்டும். ஒரு பலம் பொருந்திய ஆயுதப் போராட்ட சக்தியாக இருந்து கொண்டே நாம் ஜனநாயக நீரோட்டத்தில் இறங்க இருக்கின்றோம். எனவே எமது கட்சியின் அமைப்பானது எமது விடுதலை இயக்கத்தை ஒரு பலம் வாய்ந்த ஜனநாயக சக்தியாகவும் மாற்றியமைக்க வேண்டும் — என்றார்.

நேற்றைய மாநாட்டின் முடிவில் கட்சியின் முன்னணி உறுப்பினரான திரு. செங்கதிர் உரையாற்றினார்.

பொதுச் சபை மகாநாடு இன்று தொடர்ந்து நடைபெறும். (உ)

யாழ் மாநகர சபைப் பகுதியில்

# விதி ஒழுங்கு நடைமுறை விரைவில் அமுல்செய்யப்படும்

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ் மாநகரசபைப் பகுதியில் வீதி ஒழுங்கு நடைமுறைகள் விரைவில் அமுல் செய்யப்பட இருக்கின்றது.

வாகனப் போக்குவரத்துகள் ஓர் ஒழுங்கின்றி நடைபெறுவதால் பாதசாரிகள் பாதிக்கப்படுவதுடன் விபத்துக்களும் நடக்க வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன.

போக்குவரத்துக்கு இடைஞ்சலாக வீதிகளில் குவியலாக பொருள்களைப் போட்டு வியாபாரம் செய்வதும், நடைபாதை வியாபாரமும் தடை செய்யப்பட இருக்கின்றன.

ஒருவழிப் பயண முறையும் அமுல் செய்யப்பட இருப்பதாகத் தெரிகிறது.

ஜனநடமாட்டம் அதிகமாக உள்ள வீதிகளில் வாகனங்கள் செல்ல தடையும் விதிக்கப்படலாம் என அறியவந்தது.

மாத்தறை - கம்புறுபிட்டியா வீதியில்

# எரிந்து கருகிய நிலையில் 13 சடலங்கள் கண்டுபிடிப்பு

கொழும்பு, பெப் 27

கடந்த சனிக்கிழமை மாத்தறை - கம்புறுப்பிட்டியா வீதியில் வெள்யாகுல என்ற இடத்தில் 13 அடையாளந் தெரியாத சடலங்கள் எரிந்து கருகிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன.

முதலில் பதின்மூன்று பேரும் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்றும் அதன் பின்னர்தான் சடலங்கள் எரிக்கப்பட்டன என்றும் கிராமவாசிகள் தெரிவித்தனர்.

சில தினங்களுக்கு முன்னர் இரண்டு இராணுவ அதிகாரிகள் அந்தப்பகுதியில் தீவிரவாத சந்தேக நபர்களால் கொல்லப்பட்டனர்.

அதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே 13 பேர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சொல்லப்பட்டது. (ஒ-எ)

## கிளிநொச்சி மாணவிசாதனை

கோப்பாய், பெப் 27

கிளிநொச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவி பவதாரணி ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசுப் போட்டியில் மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் வடமாநிலத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

இப்பாடசாலையைச் சேர்ந்த எட்டு மாணவர்கள் புலமைப் பரிசில்கள் பெற்றுள்ளனர். (இ-72)


A PUBLIC LECTURE

ON

Subject: **Jaffna Heriot-Watt** (Scotland) **Link**

Date : **27 - 02 - 1990**

Time : **3 - 30 p. m.**

Place : **Kailasapathy Auditorium,** University of Jaffna.

by

Professor ROBERT STURGEON

Biotechnologist

Heriot Watt University, Scotland

**All are welcome**

K. Balasubramaniam

Dean/Medicine

(C/3413)

★ கொம்பியூட்டர் கல்வி ★

**Diploma in Computer Programming & Data Processing**

4 Months

★ **Basic Language**

வார இறுதி வகுப்புகள்

ஆரம்பம்: 03 — 03 — 1990

கட்டணம்: மாதம் 300/- மட்டுமே

★ Lectures by Members of Data Processing Management (London)

★ Practicals on I. B M Compatibles

★ Valuable Certificate on Completion of Course

★ தமிழிலும் விளக்கங்கள்

C. I. M. A., I. A. B. (Book Keepers) Shorthand & Typing d Base III+, Lotus 1, 2, 3 Word - Processing

நடைபெறுகின்றன.

School of Business Administration

(Leaders in Computer Education)

16, 3rd, Cross Street,

(O. L. R. தேவாலய மேற்குப் பக்கம்)

யாழ்ப்பாணம்.

[சி-3411]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அந்தியகால சேவையில் உற்ற நண்பன்!
★ பிரேதப் பெட்டிகள்
★ மலர்வளையங்கள் ★ எம்பாமிங்
★ குழியுள் பிரேதம் இறக்கும் 'டிவைஸ்'
★ ஊர்வல ஊர்திகள்

பிறைற் ஹவுஸ்

(சென். ஜேம்ஸ் ஆலய அருகே)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்


27 - 02 - 1990 செவ்வாய்க்கிழமை

உங்கள் இல்ல உபசரணை வைபவங்களைச் சிறப்பிக்க எம்மை நாடுங்கள்!

தகரப்பந்தல்கள், கதிரைகள், பீங்கான், கிளாஸ் வகைகள் மலிவுவாடகைக்குப்பெற

பிறைற் ஹவுஸ்

(சென்: ஜேம்ஸ் ஆலய அருகே)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



விபத்துக்குள்ளான ஜெயலலிதாவின் கார் இதுதான்.

# தி. மு. க. கொடியுடன் வந்த லொறியே ஜெயலலிதாவின் காரை மோதியது!

## காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி குற்றச்சாட்டு

சென்னை, பெப். 27
ஜெயலலிதாவின் காருடன் மோதிய லொறியில் தி.மு.க. கொடி இருந்தது. அந்த லொறியில் தி. மு. க. சின்னமும் காணப்பட்டது.

இவ்வாறு தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த விபத்து சம்பவம் குறித்து அவர் செய்தியாளரிடம் மேலும் கூறியதாவது;-

இதை ஒரு சாதாரண விபத்து என்று எடுத்துக்கொள்ள முடியாது. இதற்குப் பின்னால் நிச்சயமாக தி. மு. க. பின்னணி உண்டு.

வரிசையாக வந்துகொண்டிருந்த கார்களில் மூன்றாவதாகவந்த காரைகுறிவைத்தே அந்த லொறி போய் மோதியது. அந்தக்காரில் தான் ஜெயலலிதா இருந்தார்.

ஜெயலலிதாவை அரசியல் ரீதியில் சமாளிக்க முடியாமல் இப்படி அவரின் உயிருக்கு உலைவைக்க முயற்சித்தது நாகரிகமற்ற ஒருசெயலாகும். 1972 இல் ஆவடியில் வைத்து எம்.ஜி.ஆரின் மீதும் இப்படி ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இன்னொரு மாநிலத்தில் பணிபுரியும் மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவரைக்கொண்டு ஜெயலலிதா விபத்துக்குள்ளான சம்பவம் குறித்து நீதிவிசாரணை நடத்தப்பட வேண்டும்.

—இப்படி வாழப்பாடி இராமமூர்த்தி சொன்னார். (ஒ-எ)

## லொறிச் சாரதி கைது!

சென்னை, பெப்.27
ஜெயலலிதாபயணம்செய்த காருடன் மோதிக்கொண்ட லொறியின் சாரதி ராமமூர்த்தி விசாரணைக்காக கைதுசெய்யப்பட்டார். (ஒ-எ)

# என் உயிருக்கு உலை வைக்க மேற்கொள்ளப்பட்ட சதி!

## விபத்துக் குறித்து ஜெயலலிதா

சென்னை, பெப் 27
சனிக்கழமை நடந்த விபத்துச் சம்பவம் பற்றிய ஜெயலலிதாவின் அறிக்கையை அ. தி. மு. க. பிரசாரச் செயலாளர் எஸ். முத்துச்சாமி பத்திரிகைகளுக்கு வாசித்துக் காட்டினார்.

அந்த அறிக்கையில் செல்வி ஜெயலலிதா கூறியிருப்பதாவது:-

எனது உயிருக்கு உலை வைக்க மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட முயற்சியே இந்த விபத்துச் சம்பவம்.

இம் முயற்சிக்குப் பின்னால் உள்ள காரணங்கள் விரைவில் வெளிச்சத்துக்கு வரும்.

மறைந்த முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன், அ. தி. மு. க. தொண்டர்கள் மற்றும் தமிழ்நாடு மக்களது ஆசி காரணமாகவே நான் உயிர் தப்பினேன்.

நான் இப்போது சுகமாக இருக்கிறேன். என்னைத் தனிப்பட்ட முறையில் சந்திக்க கட்சிக் காரர்கள் முயற்சி செய்ய வேண்டாம்.

உங்களை எல்லாம் நான் விரைவில் சந்திப்பேன்.

அமைதியை நிலைநாட்டும்படி கட்சித் தொண்டர்களை வேண்டுகின்றேன்.-

இப்படி ஜெயலலிதா கேட்டிருந்தார். (உ-எ)

# ராஜீவ் சென்று பார்த்தார்!

சென்னை, பெப். 27
முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த ஞாயிறு மருத்துவ மனைக்குச் சென்று ஜெயலலிதாவைப் பார்த்தார்.

பாண்டிச்சேரியில் தேர்தல் பிரசாரத்தை முடித்துக் கொண்டு ஞாயிறு மாலை சென்னை வந்த ராஜீவ் காந்தி விமான நிலையத்தில் இருந்து நேராக மருத்துவ மனை சென்றார்.

அங்கு பத்து நிமிடங்கள் தங்கி இருந்த ராஜீவ், மருத்துவமனை அதிகாரிகளிடம் ஜெயலலிதாவின் உடல் நிலை பற்றி விசாரித்து அறிந்து கொண்டார்.

மருத்துவ மனையில் இருந்து புறப்படும்போது செய்தியாளர் மத்தியில் பேசினார் ராஜீவ் காந்தி.

''அரசியல் வானில் ஜெயலலிதாவை அகற்று முகமாக செய்யப்பட்ட சதிதான் இந்த விபத்து என்று கூறப்படுவதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?''—இப்படி செய்தியாளர் ஒருவர் கேட்டார்.

அதற்கு ராஜீவ் காந்தி, ''இப்போது அதுபற்றி கூறுவது கஷ்டமான காரியம். ஆனால் அப்படியான வதந்தி உலாவுகிறது''- என்றார். [உ-எ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27 - 02 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கருணாநிதி கண்டனம்!

சென்னை, பெப். 27
அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா கார்விபத்தில் சிக்கியது குறித்து அவதூறான முறையில் பத்திரிகைகளில் செய்தி பிரசுரமானது குறித்து தமிழ் நாடு முதலமைச்சர் கருணாநிதி நேற்று கண்டனம் தெரிவித்தார். (உ-எ)

## ஜீப் மீட்பு!

இராமநாதபுரம் பொலீஸ் நிலையம் ஒன்றின்மீது தமிழ்ப் போராளிகள் நடத்தியதாகக் கூறப்படும் தாக்குதல் சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாகச் சொல்லப்படும் ஜீப் வண்டியை பொலீஸார் நேற்றுக் கைப்பற்றினர்.

ஜீப்பை செலுத்தியதாகக் கூறப்படும் சாரதியையும் பொலீஸார் கைது செய்தனர்.

கலைஞரின் அழைப்பை ஏற்று

# முஸ்லிம் காங்கிரஸ் குழு விரைவில் சென்னை பயணம்

கொழும்பு, பெப். 27
முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த குழு ஒன்று தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதியுடன் பேச்சு நடத்துவதற்காக இரண்டொரு நாட்களில் சென்னை செல்ல இருக்கிறது.

திரு. கருணாநிதி விடுத்த அழைப்பை ஏற்றே தாம் இந்தப் பேச்சுவார்த்தைக்கு செல்ல இருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் தெரித்தார்.

வடக்கு, கிழக்கு நிலைமை குறித்து இலங்கை தமிழர் குழுக்களுடன் பேச்சு நடத்தி வரும் திரு. கருணாநிதி, அதன் ஒருகட்டமாக எமக்கும் அழைப்பு விடுத்திருக்கிறார் என்றும் அந்தப் பிரமுகர் சொன்னார். (ஒ)

## சிமெந்து விலை

போட்லண்ட் சிமெந்தின் விலை அதிகரித்துள்ளது. இவ்வருடம் ஜனவரி 30 ஆம் திகதியிலிருந்து 50 கிலோ எடை கொண்ட போட்லண்ட் சிமெந்தின் விலை ரூ. 165-00 ஆக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-37)

# பயிலுநர் ஆசிரியர் தெரிவு: இதுவரை 5,000 முறையீடுகள்

யாழ்ப்பாணம், பெப். 27
யாழ்மாவட்டத்தில் பயிலுனர் ஆசிரியர் வெற்றிடங்களுக்குத் தெரிவானவர்கள் தொடர்பாக ஐயாயிரத்துக்கு மேற்பட்ட முறையீடுகள் யாழ் கல்வித்திணைக்களத்துக்குக் கிடைத்துள்ளன.

தெரிவானவர்களின் முதல் பட்டியல் கோட்டக்கல்வி அலுவலகங்களிலும், உதவி-அரசாங்க அதிபர் அலுவலங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

முறையீடுகள் எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன் யாழ் கல்வித்திணைக்களத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

நேற்று ஆயிரக்கணக்கானவர்கள் கல்வித்திணைக்களத்தில் கூடியிருந்தார்கள்.

முறையீடுகளைச் சேர்ப்பிக்கப் பெட்டி ஒன்று கல்விப் பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை பயிலுநர் ஆசிரியர் தெரிவுகள் தொடர்பாக நேற்று யாழ் கல்வித் திணைக்களத்தில் கோட்டக் கல்வி அதிகாரிகளின் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. (ஒ-3)

# தி.மு.க. மீது பழி போடுவதா? ஆற்காடு வீராசாமி கண்டனம்

சென்னை, பெப் 27
ஜெயலலிதா விபத்துக்குள்ளான சம்பவத்துக்கு தி. மு. க. வையும் முதலமைச்சர் கருணாநிதியையும் குறை கூறுவதை தி. மு. க. தலைமைச் செயலாளர் ஆற்காடு வீராசாமி வன்மையாகக் கண்டித்தார்.

இது சம்பந்தமான அறிக்கை ஒன்றில் திரு. ஆற்காடு வீராசாமி தெவித்திருப்பதாவது;

நாட்டில் தினமும் ஆயிரக்கணக்காண வீதி விபத்துக்கள்ஏற்படுகின்றன. அவற்றில் ஜெயலலிதா பயணம் செய்த கார் விபத்துக்குள்ளானதும் ஒன்று.

முதலமைச்சர் கருணாநிதி கூட ஐந்துக்கும் அதிகமான விபத்துக்களில் சம்பந்தப்பட்டிருக்கிறார்.

இதைவிட எத்தனையோ எம். எல். ஏக்களும் எம்பிக்களும் விபத்துக்குள்ளாகி இருக்கின்றனர். ஒருவருமே இதற்காக அரசியல் கட்சிகள் மீது குறை கூறவில்லை.

ஒவ்வொன்றுக்கும் தி.மு.க. மீது பழி போடுவது தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்திக்கு பழக்கமாகி விட்டது — என்று ஆற்காடு வீராசாமி அறிக்கையில் கூறியுள்ளார். (ஒ-எ)

யாழ். இறைவரிப் பிரிவு நேற்று ஆரம்பம்

# 20 வாகன உரிமையாளர் வரிப்பத்திரம் பெற்றனர்

யாழ்ப்பாணம், பெப். 27
யாழ் செயலகத்தில் நேற்று மீண்டும் இயங்க ஆரம்பித்த இறைவரிப் பிரிவில் 20 வாகன உரிமையாளர்கள் தமது வாகன வரிப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டனர்.

87ஆம் ஆண்டு மூடப்பட்ட இந்தப் பிரிவு மீண்டும் நேற்று இயங்க ஆரம்பித்தது.

இந்த வரிப் பத்திரம் பெறுவதற்கு தற்சமயம் செல்லுபடியாகக் கூடிய காப்புறுதிப் பத்திரம் சமர்ப்பிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் பத்திரம் யாழ் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படாததால், வாகன உரிமையாளர்கள் வவுனியா சென்று காப்புறுதிப் பத்திரம் பெற்றே வாகனப் பதிவை மேற்கொள்கிறார்கள்.

இதன்காரணமாகவே அதிகமானவர்கள் வாகன வரி பெற செயலகம் வரவில்லை என்று இறைவரிப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-3)

# மோட்டார் வாகன காப்புறுதி நாளைமுதல் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், பெப் 27
யாழ். காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நாளை புதன் கிழமை முதல் மோட்டார் வாகனங்களுக்குரிய காப்புறுதிகளை வழங்க இருக்கிறது.

யாழ் காப்புறுதிக் கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் திரு. கே. அப்புத்துரை இவ்வாறு தெரிவித்தார்.

மோட்டார் வாகனங்களுக்கு காப்புறுதி [illegible] வேலைகள் கட[illegible] வருடங்களாக நடைபெறவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் அனுமதி அளித்ததை அடுத்தே மீண்டும் காப்புறுதி சம்பந்தப்பட்டவேலைகள் ஆரம்பிக்கப்படுவதாக அவர்மேலும் தெரிவித்தார்.

அத்துடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தீவிபத்துகாப்புறுதி, கொள்ளை சம்பந்தமான காப்புறுதி ஆகியனவும் [illegible] இன்னும் [illegible] (ஒ-3)

## இன்று விசேஷ விரிவுரை

மாழ்ப்பாணம், பெப் 27
ஸ்கொத்லாந்து ஹேரியற்-உவாற் பல்கலைக்ழக பேராசிரியர் றொபேட் ஸ்ற்றேஜன் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3-30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் விரிவுரை ஒன்றை நிகழ்த்துவார்.

யாழ் பல்கலைக் கழகமும் ஹேரியற் —உவாற்- பல்கலைக் கழகமும் இணைந்து மேற்கொள்ள இருக்கும் செயல் திட்டங்கள் பற்றியதாக இவரது விரிவுரை அமையும். (ஒ-3)

## இன்று தேர்தல்

புதுடில்லி, பெப் . 27
வட இந்தியாவில் இன்று (செவ்வாய்க்கிழமை ஏழுமாநிலங்களின் சட்டசபைகளுக்கும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேச சட்டசபைக்கும் தேர்தல்கள் நடைபெறுகின்றன.

வாக்குகள் எண்ணும் பணி நாளை புதன்கிழமை ஆரம்பமாகும்.

இன்றைய தேர்தல்களில் சுமார் 23 கோடி மக்கள் வாக்களிக்கிறார்கள்.

தேர்தல் நடைபெறும் மாநிலங்களாவன;

இமாசலப்பிரதேசம், மத்திய பிரதேசம், ஒரிஸ்ஸா, பீஹார், ராஜஸ்தான், அருணாசலப்பிரதேசம், மகாராஷ்டிரம். (ஒ-எ)

# இலங்கை-இந்திய ஒப்பந்தம் தமிழர் மீது திணிக்கப்பட்டது

## பல்கலைக்கழகத்தில் நெடுமாறன் உரை

யாழ்ப்பாணம், பெப் 27
யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மறுமலர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் நேற்று ஒழுங்கு செய்யப்பட்டகூட்டத்தில் தமிழகப் பிரமுகர் திரு. பி. நெடுமாறன் உரையாற்றினார்.

கூட்டத்தில் திரு. நெடுமாறன் இந்தியப்படை ஈழத் தமிழர்களுக்கு இழைத்த கொடுமைகளை வன்மையாக கண்டித்துப் பேசினார்.

இலங்கை — இந்திய ஒப்பந்தத்தைக் கண்டித்த அவர், ஒப்பந்தத்தைதமிழர்கள் ஏற்கவில்லை அது அவர்கள் மீது திணிக்கப்பட்டது என்றும் சொன்னார்.

விடுதலைப் புலிகளின் போராட்டம் வரலாற்றில் சரியான ஒரு கூர்ப்பு முனையை அடைந்துள்ளது.

இதனால் இந்திய ராணுவம் ஈழத்தை விட்டு வெளியேற்றப் பட்டது.

ஈழத் தமிழரின் போராட்டத்திற்கு நாம் தொடர்ந்தும் ஆதரவு அளிப்போம் என்றும் திரு. நெடுமாறன் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்திற்கு தலைமை வகித்த மறுமலர்ச்சிக்கழகத் தலைவர் அருணோதயம் உரையாற்றுகையில் இலங்கை இந்திய இராணுவங்களின் யுத்த காலத்தின் மத்தியில் கூட பல வெளிநாட்டுச் செய்தியாளர்களையும் தமிழ்நாட்டு தலைவர்களையும் அழைத்து வந்து தமிழ் மக்களின் இன்னல்களை வெளியுலகிற்கு தெரிவிக்க வழிவகுத்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நன்றி தெரிவித்தார். (ஒ)

# மரண அறிவித்தல்கள்

## திரு. வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம்

யாழ்ப்பாணம் வைமன் றோட்டைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம் காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற கமலாம்பிகையின் அன்புக் கணவரும் சிவதாசன் (லண்டன்), ராம்தாஸ் (கனடா), அமிர்தகலா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் 27-02-90 செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணியளவில் 24, வைமன் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
அமிர்தகலா

24, வைமன் றோட்,
யாழ்ப்பாணம். [11915]

## கந்தசாமி - ஜெகநாதன் (ஜெகன்)

(ராணி மில் நெல்லியடி, செல்வம் மில் முள்ளியவளை, உரிமையாளர்)

நெல்லியடியைச் சேர்ந்த கந்தசாமி ஜெகநாதன் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னாரது பூதவுடல் 27 - 2 - 90 இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் நெல்லியடி ஆலங்கட்டை மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

ராணி மில்,
நெல்லியடி. (11916)

## திருமதி சிவகங்கை கந்தையா

அளவெட்டி, தெற்கு

அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற கார்த்திகேசு கந்தையா அவர்களின் அன்புத் துணைவியார் சிவகங்கை 24 - 2 - 90 சனிக்கிழமை சிவபதமெய்தினார்.

இவர் நாகம்மா ஆறுமுகம் (இளைப்பாறிய அத்தியட்சகர், இரசாயனக் கூட்டுத்தாபனம் பரந்தன்) பாக்கியலட்சுமி (கனடா), ஞானலட்சுமி (லண்டன்), குலசிங்கம் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), தனலட்சுமிகுணசிங்கம்(பொறியியலாளர் அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசுப்பிரமணியம், ஆ. இராசலட்சுமி, அரசரட்ணம் (இளைப்பாறிய பொறியியலாளர் கனடா), கு. சிவநாயகி (அவுஸ்திரேலியா), மகேந்திரலிங்கம் (புள்ளி விபர உத்தியோகத்தர்), கு. இரஞ்சினி (அவுஸ்திரேலியா)ஆகியோரின் அன்பு மாமியாரும், மனோகரன், சிறீதேவி, ஜெயதேவி, ரோகிணி, வத்சலா, மாலதி (அமெரிக்கா), சுமதி (லண்டன்), இரவினா (கனடா), சூரியகுமார் (அமெரிக்கா), துஷ்யந்தன் (கனடா), தர்ஷனன் (IIT, கான்பூர்), ஜீவராணி, அனுஷியா, அர்ச்சுனன், (அவுஸ்திரேலியா), நகுலன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25 - 2 - 90 ஞாயிற்றுக்கிழமை அளவெட்டியில் நடைபெற்று குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. உற்றார், உறவினர், நண்பர்கள், இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. ஆறுமுகம்.

அளவெட்டி தெற்கு. (2665)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org